www.tamilarangam.net



# தமிழீழ விடுதலைப் போராட்டமும் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சமர்ப்பணம்

தங்கள் கனவுகளைத் துறந்து
தாயகக் கனவுகளை நெஞ்சில் சுமந்து
தங்கள் குருதியால் தமிழீழ
மண்ணைச் செம்புலமாக்கி விட்ட
கார்த்திகைத் தீபங்களுக்கு,
மார்கழிப் பூக்களுக்கு இந் நூலைக்
காணிக்கையாக்குகிறோம்.

www.tamilarangam.net



# முன்னுரை

இந்த நூற்றாண்டின் உலகின் தலை சிறந்த இராணுவத் தந்திரியும், கெரில்லாப் படைத் தளபதியும், தமிழீழ மக்களின் தேசியத் தலைவராகவும், ஆறு கோடித் தமிழரின் விடிவெள்ளியுமாக திரு. பிரபாகரன் அவர்கள் விளங்குகின்றார்.

தமிழீழ விடுதலைப் போராட்டமும் தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரனும் என்னும் இந் நூலை வெளியிடுவதில் உலகத்தமிழர் இயக்கம் பெரு மகிழ்ச்சியடைகிறது. அதிலும் இந்நூல் ஆறாவது ஆண்டு மாவீரர் நாள் விழாவன்று வெளிவருவது எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.

தமிழர்கள் தங்கள் வரலாற்றைச் சரியாகவும் கோர்வையாகவும் எழுதி வைக்கவில்லை என்பது பொதுவான ஒரு குறைபாடாகும். தமிழ்நாட்டு வரலாறு மட்டுமல்ல, தமிழீழ வரலாறும் சரிவர எழுதப்படவில்லை. 13ஆம் நூற்றாண்டுத் தொடக்க முதல் 17ம் நூற்றாண்டு வரை தமிழீழத்தில் ஒரு பலமான அரசு நிலைபெற்று இருந்த "யாழ்ப்பாண இராச்சியம்" பற்றிய வரலாறுகூட முழுமையாக, காலவரையறையாக எழுதி வைக்கப் படவில்லை.

எனவே இந் நூலை வெளியிடுவதன் மூலம் எதிர்காலத் தலைமுறையினருக்கு நாம் ஆற்ற வேண்டிய வரலாற்றுக் கடமையை ஓரளவாவது ஆற்றியிருக்கிறோம் என்ற மனத் திருப்தியும் ஆத்ம திருப்தியும் எமக்குண்டு.

இந் நூலில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தோற்றம், போர்முறை, தமிழ்த் தேசிய விழிப்பு, தமிழீழக் கட்டுமானங்களுக்கான அத்திவாரங்கள், இவற்றின் படிமுறை வளர்ச்சி என்பன பற்றியும் தமிழ்த் தேசியத் தலைவரின் இளமைக்காலம், கரந்துறை வாழ்க்கை, அரசியல்- இராணுவச் செயற்பாடுகள், ஆளுமை என்பன பற்றியும் சுருக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும் தமிழீழத் தேசியத் தலைவரையும் ஆற்றின் இருகரைக்கு ஒப்பிடலாம். தலைவர் பிரபாகரன் இல்லாமல் தமிழீழ விடுதலைப் போராட்டத்தையும், தமிழீழ விடுதலைப் போராட்டம் இல்லாமல் தலைவர் பிரபாகரனையும் பிரித்துப் பார்க்க முடியாது.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாறும், தலைவர் பிரபாகரனது வரலாறும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்து இருக்கிறது.


தலைவர் பிரபாகரன் வாழும் காலத்தில் நாம் வாழ்வதையிட்டு பெருமைப்படுகிறோம். இந்த வரலாற்று நாயகன் தலைமையில் புலிப்படை செருக்களம் சென்று, பகைப்புலம் மாய்த்து தமிழீழம் தனது இறைமையையும், சுதந்திரத்தையும் வென்றெடுக்கும் என்பது எங்கள் அசைக்க முடியாத நம்பிக்கை.

தாயக விடுதலைக்கான போராட்டத்தில் புலம் பெயர்ந்த மக்கள் தங்கள் பங்களிப்பையும், தங்கள் வரலாற்றுக் கடமையையுஞ் செய்து முடிக்க வேண்டும். புலம் பெயர்ந்த மக்களது பங்களிப்பு உணர்வு பூர்வமாக மட்டும் அல்லாது அறிவு பூர்வமாகவும் இருப்பதற்கு இந்நூல் துணை புரியும் என நம்புகிறோம்.

***அரசியல் பிரிவு***
***உலகத்தமிழர் இயக்கம்***
***ரொரன்ரோ***
***27-11-94***

www.tamilarangam.net





www.tamilarangam.net





7 வயதுச் சிறுவனாக



இளைஞனாக

www.tamilarangam.net



# பகுதி - 1



# தமிழீழ விடுதலைப் போராட்டமும் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனும்.

## திரு. பிரபாகரன் அவர்களின் குடும்பப் பின்னணியும் சிறுபராயமும்

யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட மன்னர்கள் காலத்திலும், அதற்குப் பின்னரும் வட தமிழீழத்தின் முக்கிய துறைமுகப்பட்டி னங்களில் ஒன்றாகவும், தமிழக கோடிக்கரை க்கும் வட தமிழீழத்திற்கும் பாலமாகவும் கப் பலோடி, திரைகடல்களில் திரவியம் குவித்த மறவர்கள் வாழும் பூமிதான் வல்வெட்டித் துறை. தமிழீழச் சரித்திரத்தில் இவ்வூர் அழி யாப்புகழைப் பெறுகிறது. காரணம் இங்கு தான் தமிழீழ தேசிய விடுதலைப் போரை மக்கள் ஆதரவுடன் முன்னெடுத்துச் செல் லும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க த்தை ஆரம்பித்தவரும் தமிழீழத்தின் தேசி யத் தலைவராக மதித்து போற்றிப் புகழப் படுபவருமான பிரபாகரன் அவர்கள் 1954 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 26ம் திகதி பிறந்தார்.

வல்வெட்டித்துறையில் பிரபலமான குடும் பம் "திருமேனியார் குடும்பமாகும்". இக்குடும் பத்தின் மூதாதையரான திருமேனியார் வெங் கடாசலம் என்பவர் அவ்வூரிலுள்ள வல்வை வைத்தீஸ்வரன் கோவிலைக்கட்டியும், வல்வை முத்து மாரியம்மன் கோயில், நெடியகாடு பிள்ளையார் கோயில் இரண்டையும் கட்ட உதவியும் செய்தார். இவ்வூருக்கு அருகிலு ள்ள பருத்தித்துறையில் மெத்தை வீட்டு நாகலிங்கம் என்பவரின் குடும்பமும் பல கோவில்களைக் கட்டியெழுப்பிய குடும்பம் ஆகும். இவ்விரு குடும்பத்தினரும் திருமண உறவின் மூலம் இணைந்தனர். திருமேனி யார் குடும்பத்தில் தோன்றிய திரு. திருவேங் கடம் வேலுப்பிள்ளையும், நாகலிங்கம் வழித் தோன்றிய பார்வதியும் திருமணத்தில் இணை ந்துகொண்டனர். இவர்களுக்குப் பிறந்த கடைசிக் குழந்தையே பிரபாகரன் அவர்கள். இவருக்கு ஒரு அண்ணனும் இரண்டு அக்கா மாரும் இருக்கிறார்கள். அண்ணனும் அக்கா மார்களும் திருமணம் செய்து விட்டார்கள். பிரபாகரன் அவர்களின் தந்தை இலங்கை

www.tamilarangam.net



அரசாங்கத்தின் மாவட்டக் காணி அதிகாரியாகப் பல வருடங்கள் கடமை புரிந்தவர்.

பிரபாகரன் அவர்கள் தனது கல்வியை வல்வெட்டித்துறையில் ஊரிக்காடு என்னும் இடத்திலுள்ள "சிதம்பரா கல்லூரியில்" 10ம் வகுப்பு வரையிலும் கற்றார்.

யாழ்ப்பாணத்தில் அந்நாட்களில் செல்வம்மிக்க குடும்பங்களில் பிறந்த பிள்ளைகள் ஆங்கிலம் கற்பதும் வெளிநாடுகளுக்கு வேலைக்குப் போவதும் அரச பணிகளில் அமர்வதுமே வாழ்வின் இலட்சியமாகக் கொள்வது நடைமுறையாக இருந்து வந்தன. ஆனால் பிரபாகரன் அவர்களின் சிந்தனையோட்டம் சிறுவயதிலேயே வேறுவிதமாக இருந்தது.

தந்தையுடன் வெளியிடங்களுக்குச் செல்லும்போது சிங்களக் காவற்துறையினர் அப்பாவித் தமிழர்களை அடித்து இம்சிப்பதையும் உதைப்பதையும் கண்டதினால் சிறுவனாக இருந்த பிரபாகரனின் பிஞ்சு உள்ளத்தில் அதிர்ச்சியும் வேதனையும் ஏற்பட்டதுடன் அவைகளே ஆழமான வடுவையும் ஏற்படுத்திவிட்டன. அதிலும் குறிப்பாகப் பிரபாகரன் அவர்கள் சிறுவனாக இருந்தபோது *1958* ஆம் ஆண்டில் நடந்த **முதலாவது தமிழின அழிவில்** நிகழ்ந்த பயங்கர சம்பவங்கள் அவர் மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்திவிட்டன. சிங்கள இனவெறியரால் எம்மக்கள், ஈவிரக்கமில்லாது கொடூரமாகக் கொல்லப்பட்ட நெஞ்சை உறுத்தும் சம்பவங்களை அவர் கேள்விப்பட்டதோடு, அவருடைய பெற்றோருக்கு நன்கு தெரிந்த ஒரு விதவைத் தாய் தனக்கு நேர்ந்த துயரச் சம்பவத்தைச் சிறுவனாக இருந்த பிரபாகரனுக்குக் கூறியபோதும் சிறுவர்களைக் கொதிக்கும் தார்ப் பீப்பாக்களினுள் உயிருடன் வீசிக் கொன்ற கோர சம்பவங்கள், பாணந்துறையில் இந்துக் குரு ஒருவர் உயிரோடு தீ மூட்டி எரிக்கப்பட்ட சம்பவம், இவ்வாறு அநாதரவான அப்பாவித் தமிழர்கள் எவ்வாறெல்லாம் கொடூரமான தாக்குதலுக்கு உள்ளாகின்றனர் என்பதையெல்லாம் அவர் அறிந்தபோதும் தமிழ் மக்கள் மீது ஆழ்ந்த அனுதாபமும் அன்பும் ஏற்பட்டது. இந்தச் சிங்கள இனவெறி அமைப்பின் பிடிக்குள்ளிருக்கும் தமிழ் மக்களை மீட்டெடுக்க வேண்டுமென்ற உத்வேகம் அவர் மனதில் உருவாகியது. நிராயுதபாணிகளான அப்பாவித் தமிழர்களுக்கெதிராக ஆயுதவலிமையைப் பிரயோகிக்கும் இனவெறி அமைப்பினை ஆயுதப் போராட்டத்தின் மூலமே எதிர்கொள்ள முடியும் என்று அவர் ஆழமாக உறுதியாக உணர்ந்தார்.

இதனால் பிரபாகரன் அவர்கள் படிக்கும் சிறுவனாக இருந்தபோது அவரும் அவருடைய நண்பர்களும் சேர்ந்து கைக்குண்டுகளைத் தயாரிக்கப் பழகினார்கள். ஒருமுறை பிரபாகரன் அவர்கள் கைக்குண்டுகளைத் தயாரிக்கும் போது எதிர்பாராதவிதமாகக் குண்டு வெடித்து அவரது காலில் எரிகாயம் ஏற்பட்டது. மருத்துவ சிகிச்சைக்குப் பின்னர் அந்த இடம் கருமையாக மாறியது. அதனால் 'கரிகாலன்' என்னும் புனைபெயரும் பிரபாகரனுக்குச் சிறுவயதிலேயேஅமைந்தது.

தமிழ் மாணவர்கள் பாடசாலைக் கல்வியை முடித்தபிறகு மேற்படிப்புக்குச் செல்ல சிங்கள அரசின் 'தரப்படுத்தல் கொள்கை' ஒரு தடையாக இருந்தது. 10ம் வகுப்புவரையிலும் படித்த பிரபாகரன் அவர்கள் விடுதலைப் போராளியாகச் செயற்படத் தொடங்கிவிட்டதனால் படிப்பைத் தொடரவில்லை.

பிரபாகரன் அவர்களின் போக்கு அவரது பெற்றோருக்குப் புரியவில்லை. மகன் புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிறார் என்பதை அவர்கள் அறிந்துகொள்ளும் சந்தர்ப்பம் தானே தேடிவந்தது. ஒருமுறை பிரபாகரன் அவர்களைத்தேடி காவற்துறையினர் வந்தனர். அதிகாலை 3 மணிக்கு காவற்துறையினர் அவரின் வீட்டுக்குக் கதவைத் தட்டினர். கதவைத் தட்டும் சத்தம் கேட்டவுடனேயே காவற்துறையினர் வந்துவிட்டனர் என்பதைப் புரிந்து கொண்ட பிரபாகரன் அவர்கள் யாரும் அறியாமல் தப்பிவிட்டார். பிரபாகரன் அவர்களின் தாய் கதவைத் திறந்தபோது ஏராளமான காவற்துறையினர் இருப்பதைக்

www.tamilarangam.net



கண்டு திடுக்கிட்டுப்போனார். ஏனென்றால் பிரபாகரன் அவர்கள் 'இரகசிய இயக்கத்தில்' இருக்கிறார் என்ற செய்தியை அப்போது அவர் அறிந்திருக்கவில்லை. வீடு முழுவதும் காவற் துறையினர் சோதனையிட்டனர். இறுதியில் பிரபாகரன் அவர்களைக் கண்டுபிடிக்க முடியாமல் காவற்துறையினர் ஏமாற்றத்துடன் திரும்பினர். இந்த நிகழ்ச்சிக்குப் பின் பிரபா-கரன் அவர்கள் தன் வீட்டிற்குத் திரும்பவே இல்லை. பிரபாகரன் அவர்கள் புரட்சி இயக் கத்தில் ஈடுபட்டிருக்கிறார் என்ற செய்தியை அறிந்தபோது அவரது தந்தையார் பிரபாகரன் அவர்கள் தங்கியிருந்த இடத்திற்கே சென்று அவரை வீட்டிற்கு அழைத்துவந்தார். வீட்டி ற்கு வந்த பிரபாகரன் அவர்கள் தன் பெற் றோரிடம் பின்வருமாறு கூறினார் "உங்களு க்கோ, குடும்பத்திற்கோ நான் ஒருபோதும் பயன்படமாட்டேன். என்னால் உங்களுக்கு எத்தகைய தொல்லையும் வேண்டாம். என்னை என்போக்கில் விட்டுவிடுங்கள், இனி எதற்கும் என்னை எதிர்பார்க்காதீர்கள்" என்று சொல்லிவிட்டு வீட்டைவிட்டு வெளியே றிப்போய் இரகசிய இயக்க வேலையில் முழுமையாக ஈடுபடத் தொடங்கினார்.

## ஆரம்பகால புரட்சித் தோழர்கள்

பிரபாகரன் அவர்களின் புரட்சிகரப் போரா ட்ட வாழ்க்கையின் ஆரம்பகாலத் தோழர்கள் அவரது ஊரான வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களாகவும் உறவினர்களாகவுமே இருந்தனர். இளம் பிராயத்தில் நெருங்கிப் பழகியவர்களைக் கொண்டு ஒரு புரட்சிகர இயக்கத்தை ஆரம்பிக்கும்போது அது அப்படி த்தான் அமையும். இவ்வாறு அமைவது தவிர் க்கமுடியாதது, யதார்த்தமானது.

## 'புதிய தமிழ்ப் புலிகள்' இயக்கம் பிறந்தது

1970ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் தமிழர் களுக்கு எதிராக ஏவிவிடப்பட்ட கடுமையான அடக்குமுறையும், சகலதுறைகளிலும் தமிழர் கள் புறக்கணிக்கப்பட்ட விதமும், தமிழ் இளைஞர்கள் மத்தியில் கடுமையான எதிர்ப் புணர்வை உருவாக்கியிருந்தது. சிங்கள இன வெறி ஆட்சிக்கு எதிராக ஏதாவது செய்தாக வேண்டுமென்று இளைஞர்கள் துடித்தனர். தமிழர்களின் கட்சிகளோ அல்லது மற்ற சிங் கள இடதுசாரி இயக்கங்களோ இந்த இளை ஞர்களின் மனக்கொதிப்பைப் புரிந்து கொள்ள வில்லை. கடுமையான அடக்குமுறைக்கு உள்ளாகியிருக்கும் தமிழர்களுக்காகப் போரா டச் சரியான தலைவர்களோ, இயக்கங்களோ இல்லை என்று இளைஞர்கள் கருதினார்கள். 30ஆண்டுகளுக்கு மேலாக பல்வேறு வகை யான அறப்போராட்டங்களைத் தமிழ்த் தலை வர்கள் நடத்தியிருந்தபோதிலும் கூட, இலங் கையின் ஆட்சிப் பொறுப்பிலிருந்து அவர்கள் ஒதுக்கியே வைக்கப்பட்டிருந்தனர். பாராளு மன்றத்தில் அவர்கள் எழுப்பிய குரலுக்குச் செவிசாய்ப்பார் யாரும் இல்லை. கானகத்தில் காரிருளில் எழுப்பப்பட்ட குரலாக அவை ஒலித்தன. சிங்கள இனவெறிக்கு இரையாகி ப்போன இடதுசாரிக் கட்சிகளும் கூட்டுச் சேர்ந்து தமிழருக்கு எதிராகச் செயற்பட்டன, தமிழர்களின் போராட்டங்களை அவர்களும் அலட்சியம் செய்தனர். எனவே தமிழ் இளைஞர்கள் இடதுசாரிக் கட்சிகளை நம்பக் கொஞ்சமும் தயாராக இருக்கவில்லை.

இதன் விளைவாகத் தமிழ்ப் பகுதியில் அரசியல் சூனியநிலை ஒன்று உருவாயிற்று. சிங்கள பேரினவாதிகளின் தமிழ்த் தேசிய இன ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்தெழு ந்து, தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்நடத்திச் செல்லப் **'புரட்சிகரமான அரசி யல் அமைப்பு'** ஒன்று இன்றியமையாதது என்பதைத் தமிழ் இளைஞர்கள் உணரத் தொடங்கினார்கள்.

இதனால் **'தமிழ் மாணவர் பேரவை'** என்ற மாணவ இயக்கம் 1970 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. சிங்கள அரசு கொண்டு வந்த தரப்படுத்தல் திட்டத்திற்கு எதிராக மாணவர்களை ஒன்று திரட்டி மாபெரும் ஆர்ப்பாட்டங்களைத் தமிழ் மாணவர்

www.tamilarangam.net



பேரவை நடத்தியது. தமிழ் மாணவர் மத்தியில் மாபெரும் சக்தியாக இப்பேரவை வளர்ந்தது. ஆயுதம் தாங்கிய புரட்சியின் மூலமே சிங்கள இனவெறியர்களின் கொடுமைகளில் இருந்து தமிழர்கள் விடுதலை பெறமுடியும் என்பதை மெல்ல மெல்லத் தமிழ் இளைஞர்கள் உணரத் தொடங்கினர்.

தமிழ் மாணவர்கள் பேரவை பலம்பொருந்திய இயக்கமாக வளர்ந்தது. இதில் தீவிரவாதக் குழுவின் முக்கியமானவராக பிரபாகரன் அவர்கள் இயங்கினார். அக்குழுவில் வயதில் குறைந்தவராகப் பிரபாகரன் அவர்கள் இருந்தபடியால் **'தம்பி'** என்ற செல்லப் பெயர் கொண்டு மற்றவர்களால் அழைக்கப்பட்டார். (இன்றும் இப் பெயர் கொண்டு பிரபாகரன் அவர்களை அழைப்பவர்கள் இருக்கிறார்கள்) தொடக்க காலத்தில் கைக்குண்டுகள் செய்வதற்கும் துப்பாக்கியால் சுடுவதற்கும் இவர்கள் தாமாகவே பயிற்சி பெற்றனர். இந்தத் தீவிரவாதக் குழுவில் பிரபாகரனுக்கு நெருக்கமான வல்வெட்டித் துறையைச் சேர்ந்த 25 பேருக்கு மேற்பட்டோர் இருந்தனர்.

இக்கால கட்டத்தில் அரசாங்கத்திற்குத் தங்களுடைய எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் அரச பேருந்து ஒன்றை எரிப்பது என்ற முடிவை பொறுப்பேற்றுக் கொண்டு பிரபாகரன் அவர்கள் உட்பட நான்குபேர் சென்றார்கள். ஆனால் மற்றவர்கள் மூவரும் நடுவிலேயே அச்சமிகுதியால் திரும்பி ஓடி விட்டார்கள். 16 வயதுச் சிறுவனாக இருந்த பிரபாகரன் அவர்கள் மட்டும் மனத்துணிவுடன் சென்று அரச பேருந்தைக் கொழுத்திவிட்டுத் திரும்பி வந்தார். பிரபாகரனின் இந்தத் துணிவும், ஆற்றலும் அனைவரையும் கவர்ந்தன. அவரைவிட வயது மூத்தவர்கள் எல்லோரும் அவரின் துணிவையும் பொறுப்பெடுத்த காரியத்தை வெற்றிகரமாக முடித்த திறமையையும் பாராட்டினார்கள். **தமிழ் தீவிரவாதத்தின், தமிழ் தீவிரவாத இயக்கத்தின் முன்னோடியாகத் தோன்றிய பிரபாகரன் அவர்கள் மீது அனைவருக்கும் நம்பிக்கை ஏற்பட்டது.**

அதே நேரத்தில் தமிழ் மாணவர் பேரவையின் நடவடிக்கைகளைக் கவனித்து வந்த சிங்கள அரசாங்கம் அதை ஒடுக்குவதற்கு முயன்றது. தமிழ் மாணவர் பேரவை இளைஞர்கள் சிலரைப் காவற்துறையினர் கைதுசெய்து சித்திரவதை செய்தனர். சித்திரவதை தாங்கமுடியாமல் அவர்களில் ஒரு சிலர் தமது சக கூட்டாளிகளைக் காட்டிக் கொடுத்துவிட்டார்கள். சிங்கள காவற்துறையின் கொடுங்கோலர்கள் அனைவரையும் தேடத் தொடங்கினர். பலரைக் கைது செய்து சிறையில் அடைத்து சித்திரவதை செய்தனர். (இக் காலத்தில் கொழும்பிலிருந்த 4ம் மாடி என்ற கட்டிடம் தமிழ் இளைஞர்களை சித்திரவதை செய்வதற்கு பெயர் பெற்ற இடமாகும்). அதனால் பிரபாகரன் அவர்கள் தமிழகத்துக்குச் சென்றார்.

பிரபாகரன் அவர்கள் தமிழகத்தில் தொடர்ந்து இருக்க விரும்பாமல் 1972 ன் ஆரம்பப் பகுதியில் தமிழீழம் திரும்பினார். ஆங்காங்கு சிதறுண்டு இருந்த இளைஞர்களிடையே காணப்பட்ட தீவிரவாதச் செயற்பாடு, ஒரு புரட்சிகர இயக்கத்தை, புரட்சிகர அரசியற் கோட்பாடுகளைக் கொண்ட ஒரு புரட்சிகர தலைமையை நாடி நின்றது. இப்புரட்சிகரச் சூழ்நிலையில்தான் **'புதிய தமிழ்ப் புலிகள்'** என்ற இயக்கம் 1972இன் நடுப்பகுதிகளில் தலைவர் பிரபாகரன் அவர்களால் அவரின் 17வது வயதில் தொடக்கப்பட்டது. இவ் இயக்கம் மிகவும் கடுமையான சட்டதிட்டங்களைக் கொண்டதாக ஆரம்பத்தில் உருவாக்கப்பட்டது.

www.tamilarangam.net



# பகுதி - 2



# புதிய தமிழ்ப் புலிகளும் அவர்களின் செயற்பாடுகளும்

"புதிய தமிழ்ப் புலிகள்" இயக்கத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமாக தலைவர் வே.பிரபாகரன் அவர்களே இருந்தார். இவ் இரகசிய இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே உறுதியும், துணிவும் தியாக சிந்தையும் கொண்ட புரட்சிகர இளைஞர்களை இவ்வமைப்பில், தலைவர் பிரபாகரன் அவர்கள், தானே தெரிவு செய்து சேர்த்துக் கொண்டதோடு, அவர்களுக்குரிய போர்ப் பயிற்சியையும் முன்னின்று தானே கொடுத்து வந்தார்.

*(1)* புதிய தமிழ்ப் புலிகளின் முதலாவது இராணுவ நடவடிக்கையாக, *1975* யூலை *27* அன்று பொன்னாலை வரதராஜப் பெருமாள் கோவிலுக்கருகில் வைத்து அப்போதைய சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்ப்பாண அமைப்பாளரும் யாழ் மேயருமான அல்பிறேட் துரையப்பா சுட்டுக்கொல்லப்பட்டார். இத்திட்டத்தை வெற்றிகரமாக முடித்த புதிய தமிழ்ப்புலிகள் மேயரின் கார்ச் சாரதியை மடக்கி, அவரது காரிலேயே ஏறித் தப்பிச் சென்றுவிட்டனர்.

இவ்வெற்றிகரமான முதலாவது இராணுவ நடவடிக்கையைத் தானே வகுத்து அதற்குத் தலைமை தாங்கிச்சென்று செய்து முடித்த பெருமை தலைவர் பிரபாகரன் அவர்களையே சாரும். தமிழீழ மக்களின் போராட்டத்தைக் காட்டிக்கொடுக்க முயலும் தமிழ்த் துரோகிகளுக்கு இச்சம்பவம் ஒரு எச்சரிக்கையாக அமைந்ததுடன் சுதந்திர தாகம் கொண்ட தமிழ் இளைஞரைப் பொறுத்தவரை இந்நடவடிக்கை தமிழீழ விடுதலையை நோக்கிய நீண்ட, கடினமான பயணத்தில் தலைவர் பிரபாகரனின் ஆளுமையிலும் தலைமைத்துவத்திலும் நம்பிக்கையை ஏற்படுத்தியதாகவும் அமைந்தது.

*(2)* "புதிய தமிழ்ப் புலிகள்" இயக்கத்தின் தலைமறைவு வாழ்க்கைக்கும் அதனைக் கட்டியெழுப்புவதற்கும் நிதி பெருமளவில் தேவைப்பட்டது. இதற்கு அரசாங்கப் பணத்தைப் பறித்தெடுத்தாக வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு ஏற்பட்டது.

www.tamilarangam.net



சிறீலங்கா அரசு எல்லா மக்களினதும் வரிப் பணத்திலிருந்தே தமது நிதியினைப் பெற்றுக்கொள்கிறதாயினும் தேசிய அபிவிருத்தித் திட்டங்களில் தமிழ்ப் பிரதேசங்கள் முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டே வந்தன. எனவே அரசாங்கப் பணத்தை பறித்தெடுத்துத் தமிழ் மக்களின் விடுதலை இயக்கத்திற்கான நிதி ஆதாரத்தைப் பெற்றுக் கொள்வது நியாயமானது என உணர்ந்து கொண்ட தலைவர் பிரபாகரன் அவர்கள் 1976 மார்ச் 5ம் திகதி சிறீலங்கா அரசுக்குச் சொந்தமான புத்தூர் மக்கள் வங்கிக்குள் பட்டப் பகலில் தன் தோழர்களுடன் புகுந்து துப்பாக்கி முனையில் ரொக்கமாக 5 லட்சம் ரூபாவையும் நகையாக 2 லட்சம் ரூபாவையும் எடுத்துக் கொண்டு சென்றார்.

அல்பிரேட் துரையப்பா கொல்லப்பட்டது, அதையடுத்து புத்தூர் வங்கிச் சம்பவம் ஆகியவற்றைத் தொடர்ந்து வடக்கில் ஒரு விசேட உளவுப் படையின் பிரிவு அமைக்கப் பட்டது. "புதிய தமிழ்ப் புலிகள் இயக்கத்தை" அழித்தொழிப்பதையே முக்கிய நோக்காகக் கொண்டு கொழும்பிலிருந்த பொலிஸ் தலைமையகம் இப்பிரிவை உருவாக்கியது. இப் பிரிவு தகவல் கொடுப்போர், துரோகிகள் ஆகியோரைக் கொண்டதாக தமிழீழப் பகுதிகளில் செயற்படதொடங்கியது.

## தமிழீழ விடுதலைப் புலிகள்

தமிழீழ விடுதலைப் புலிகள்

Liberation Tigers Of TAMIL EELAM

புதிய தமிழ்ப் புலிகள் இயக்கம், 1976 மே 5ம் திகதி **"தமிழீழ விடுதலைப் புலிகள்"** என்ற புதிய பெயரை சூட்டிக் கொண்டது. இதன் அரசியல் தலைவராகவும், இராணுவத் தளபதியாகவும் தலைவர் பிரபாகரன் அவர்களே இருந்தார். 'புதிய தமிழ்ப் புலிகள்' இயக்கத்தில் இருந்த மிகக்கடுமையான சில கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டு, முழுத் தமிழீழ மக்களும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்கக் கூடிய முறையில், சட்ட திட்டங்கள் மாற்றப்பட்டு தலைவர் பிரபாகரனால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டன.

அத்துடன் தலைவர் பிரபாகரனால், இவ் வமைப்பு நகர்ப்புறக் கெரில்லா அமைப்பாக உருவாக்கப்பட்டுத் தேசிய விடுதலைக்கான நீண்டகால மக்கள் யுத்தம் என்ற இலட்சியத் துடன், தமிழீழ மக்களின் புரட்சிகர ஆயுதப் போராட்ட இயக்கமாக விரிவடைந்தது.

www.tamilarangam.net



நிராயுதபாணிகளான, வலிமை குறைந்த தமிழீழ மக்கள் சிங்கள இனவாத அரசின் பாரிய இராணுவ வலிமைக்கு எதிராகப் போராடுவதற்கு நீண்ட கெரில்லா யுத்த பாதையே மிகவும் பொருத்தமானது என்பதைத் தனது தீர்க்கதரிசனமான கண்ணோட்டத்தில் உணர்ந்து கொண்ட தலைவர் பிரபாகரன் அவர்கள் பரந்துபட்ட மக்கள் பங்குகொள்ளும் வெகு சனப் போராட்டத்தின் முன்னோடி நடவடிக்கையாக கெரில்லாப் போர் முறையை தமிழீழ விடுதலைப் போரில் நடைமுறைப் படுத்தினார். இதுபற்றித் தலைவர் பிரபாகரன் குறிப்பிடுகையில் "கெரில்லாப் போராட்டம் என்பது ஒரு வெகுசனப் போராட்ட வடிவம். கெரில்லாப் போர்முறை மக்கள் போராட்டத்துக்கு முரண்பட்டதல்ல. மக்கள் போராட்டத்தின் உன்னத வடிவமாகவே அதனைக் கொள்ள வேண்டும். மக்கள் மத்தியில் கருக்கொண்டு, மக்களது அபிலாசைகளின் வெளிப்பாடாக உருவகம் கொள்ளும் பொழுதே கெரில்லாப் போர் வெகுசனப் போராட்ட வடிவத்தைப் பெறுகிறது. கெரில்லாப் போராட்டத்தை மக்கள் மத்தியில் நிலைகொள்ளச் செய்து அப்போரில் மக்களை நேரடியாகப் பங்களிக்கச் செய்து இப்போர் முறையை பரந்துபட்ட போராக விரிவாக்குவதே எனது நோக்கமாகும்" என்று கூறினார்.

தலைவர் பிரபாகரன், தமிழீழ விடுதலைப் போரில் தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவ நடவடிக்கைகளை முப்பெரும் பிரிவாக வகுத்தார்.

(1) சிறீலங்கா பொலிசின் உளவுப் படையை, துரோகிகளை அழித்தல்.

(2) தமிழீழத்தில் உள்ள சிறீலங்கா பொலிஸ் நிர்வாக அமைப்பை நிலைகுலையச் செய்தல்.

(3) இராணுவ அணிகள் முகாம்கள் மீது மறைந்திருந்தும் நேரிடையாகவும் தாக்கி அழித்து, அவ்விடங்களை கட்டுப்பாட்டில் கொண்டுவந்து, அவ்விடங்களில் தமிழீழ மக்களுக்கு ஏற்ற சிவில் நிர்வாக அமைப்பை உருவாக்கி அதனூடு தமிழீழத்தில் சுயாட்சியை நிறுவுதல்.

1976 யூலை 2ம் திகதி உரும்பிராயைச் சேர்ந்த நடராசா என்ற பெற்றோல் நிலைய முகாமையாளர் சுட்டுக் கொல்லப்பட்டார். 1977 பெப்ரவரி 14ம் திகதி காவற்துறை கான்ஸ்டபிள் கருணாநிதி மாவிட்டபுரத்தில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

1977 மே மாதம் 18ம் திகதி சண்முகநாதன் என்ற பெயரைக் கொண்ட 2 காவற்துறையினர் இணுவிலில் சுட்டுக் கொல்லப்பட்டனர். 1977 ஆவணியில் ஐ.தே.கட்சி அரசால் "தமிழின அழிப்பு" ஒன்று இலங்கைத் தீவு முழுவதிலும் நடத்தி முடிக்கப்பட்டது. 1978 சனவரி 27ம் நாள் பொத்துவில் தொகுதியின் தமிழர் கூட்டணி வேட்பாளர் கனகரத்தினம் கொழும்பில் வைத்துச் சுடப்பட்டார். 1978 ஏப்பிரல் 7ம் திகதி, கொழும்பு 4ம் மாடி சித்திரவதையில் பெயர் பெற்ற இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை உட்பட 4 சிறீலங்க உளவுப் படையைச் சேர்ந்த காவற்துறையினர் முருங்கன் மடு வீதிக்கு உட்புறமான காட்டில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

1978 ஏப்பிரல் 25ம் திகதி, முதன்முறையாக புதிய தமிழ்ப் புலிகள் இயக்கத்தின் இராணுவ நடவடிக்கைகளில் இருந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவ நடவடிக்கைகள் வரை எல்லாமாகச் சேர்ந்து 11 இராணுவ நடவடிக்கைகளுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் பகிரங்கமாக உரிமை கோரி அறிக்கைவிட்டனர்.

1978 மே 19ம் நாள் **"தமிழீழ விடுதலைப் புலிகள் தடைச்சட்டம்"** சிறீலங்காப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இக் கொடூரமான சட்டம் விடுதலைப் போராளிகளை அழிப்பதற்கு சிறீலங்கா ஆயுதப் படைகளுக்கு சகலவிதமான அதிகாரங்களையும் வழங்கியது.

1978 செப்டெம்பர் 7ம் நாள் ஐ.தே.க கட்சியின் ஜே.ஆர். ஜெயவர்த்தனா அரசு **"புதிய அரசியலமைப்பை"** உருவாக்கி தமிழ்

www.tamilarangam.net



மொழியை இரண்டாம் பட்ச நிலைக்குத் தள்ளியது.

1978 டிசம்பர் 5ம் திகதி திருநெல்வேலியில் சிறீலங்கா அரசுக்கு சொந்தமான வங்கியில் இருந்து 12 லட்சம் ரூபா பறிக்கப்பட்டதுடன் இரண்டு காவற்துறையினரும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

1979 யூலை 20ம் திகதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவின் இனவெறி அரசு விடுதலைப்புலிகள் தடைச்சட்டத்திற்கு எதிராகப் படுமோசமான **"பயங்கரவாதத் தடைச்சட்டத்தை"** அமுலுக்கு கொண்டு வந்தது. இச்சட்டத்தின் மூலம் ஒருவரை 18 மாதகாலத்திற்கு வெளியுலகத் தொடர்பு ஏதும் இன்றி தனிமைச் சிறையில் வைக்க முடியும்.

இதே பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட அதேதினம் வடக்கில் அவசரகால நிலையைப் பிரகடனப்படுத்தி 1979 டிசம்பர் 31ம் திகதிக்கு முன் அதாவது 6 மாதகாலத்திற்குள் வடக்கே விடுதலைப்போரை (ஜே.ஆரின் மொழியில் பயங்கரவாதத்தை) அழித்துஒழிக்குமாறு உத்தரவிட்டுப் பிரிகேடியர் வீரதுங்காவை வட மாகாணத்துக்கு அனுப்பினார் ஜே.ஆர். ஜெயவர்த்தன.

சிறீலங்கா அரசு தமிழ் மக்கள் மீது இராணுவ அடக்குமுறையைத் தீவிரமாக்கித் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை அழிப்பதற்குச் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முனைந்து நின்றபோது ஆயுதப் போராட்டத்தையும் அரசியல் போராட்டத்தையும் உறுதிப்படுத்தி விரிவாக்க வேண்டும் என்ற நோக்கில், தலைவர் பிரபாகரன் அவர்கள் அரசாங்கத்தின் எதிர்ப்புரட்சி நடவடிக்கையை முறியடிப்பதற்காகக் கெரில்லா அமைப்பு முறையைப் பலப்படுத்தி அரசியல் பிரிவையும் விரிவாக்க முடிவு செய்தார். இதன்படி 1979ம் 1980ம் ஆண்டுகளில் ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளை தற்காலிகமாகப் பின்போட்டுவிட்டு, இயக்க அமைப்பினைப் பலப்படுத்துவதில் தலைவர் பிரபாகரன் கவனம் செலுத்தினார். இக்காலகட்டத்திலேயே 'புரட்சிகர அரசியற் கோட்பாட்டைக் கொண்ட அரசியல் திட்டத்தை வரைந்து இதனூடு அரசியல் விழிப்புணர்வு கொண்ட போராளிகளை உருவாக்கினார். இக்காலகட்டத்திலேயே சர்வதேச ரீதியில் தமிழீழ விடுதலைக்குக் குரல் கொடுக்கு முகமாக தமிழீழ விடுதலைப் புலிகளின் கிளைகளை நிறுவி சர்வதேச முற்போக்கு அமைப்புக்களுடனும் நல்லுறவுகளை ஏற்படுத்துவது தலைவர் பிரபாகரனின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாக இருந்தது.

1981ம் ஆண்டு மே மாதம் 31ம் திகதி சிங்கள இராணுவப் படைகளும் ஐக்கிய தேசியக் கட்சிக் காடையர்களும் சேர்ந்து யாழ் நகரை எரியூட்டினர். தென்னாசியாவிலேயே தலைசிறந்ததாகக் கருதப்பட்ட யாழ் நூல் நிலையத்தை எரியூட்டி விலைமதிப்பற்ற 94,000 புத்தகங்களைச் சாம்பல்மேடாக்கினர். ஈழநாடு பத்திரிகை அலுவலகமும் தீக்கிரையாக்கப்பட்டது. இவ்வாறு தமிழினத்தின் மீது கலாச்சாரப் படுகொலைத் திட்டமாக அமைந்த இவ்வழிவுகளைத் தலைமை தாங்கிச் செய்து முடித்தவர்கள் அப்போதைய ஐ.தே.கட்சியின் ஆட்சியில் மந்திரியாக இருந்த சிறில் மத்தியுவும் முன்னைய ஐ.தே.கட்சி ஆட்சியில் மந்திரியாகவும் பின்னர் எதிர்க் கட்சித்தலைவருமாக இருந்து 24 ஒக்டோபர் 94 இல் குண்டுத் தாக்குதல் ஒன்றில் பலியான ஐ. தே. கட்சியின் சனாதிபதி வேட்பாளரான காமினி திசநாயக்காவும் என்று நம்பகமாக அறியப்படுகிறது.

இராணுவ அட்டூழியத்தாலும் வன்முறையாலும் தமிழீழ மக்களை அடிபணியச் செய்ய முடியாது என்பதனைச் சிங்கள இனவாத அரசுக்கு உணர்த்த வேண்டும் எனத் தீர்மானித்த தலைவர் பிரபாகரன் படையினர் மீது தாக்குதல்களை ஆரம்பிக்கும்படி தன் போரளிகளுக்குக் கட்டளையிட்டார், தாக்குதல்களும் தீவிரமாகின.

www.tamilarangam.net



## சிறீலங்கா இராணுவத்துக்கு எதிரான முதலாவது தாக்குதல்

*1981* ஒக்டோபர் *15*ம் திகதி யாழ்ப்பாணத்தில் உள்ள காங்கேசன்துறை வீதியில் இராணுவ வாகனம் ஒன்றின் மீது நடாத்தப்பட்ட தாக்குதலில் *2* இராணுவத்தினர் கொல்லப்பட்டு அவர்களது ஆயுதங்களும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன. இதுவே தமிழீழப் போராட்ட வரலாற்றில் தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட இராணுவத்தினருக்கு எதிரான முதலாவது ஆயுத நடவடிக்கையாகும்.

*1982* யூலை *2*ம் திகதி நெல்லியடியில் காவற்துறைப் படையின் மீது நடத்தப் பட்ட தாக்குதலில் *4* பேர் கொல்லப்பட்டு *3* பேர் படுகாயப்படுத்தப்பட்டனர். அவர்களின் ஆயுதங்களும் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டன.

*1982* செப்டெம்பர் *29*ம் திகதி இனவெறியன் ஜே.ஆர்.ஜெயவர்தனா சனாதிபதி தேர்தல் பிரச்சாரத்துக்காக யாழ்ப்பாணம் வந்ததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக பொன்னாலைப் பாலத்தில் வந்து கொண்டிருந்த கடற்படை வாகனங்களை அழிப்பதற்கு கண்ணிவெடிகளை விதைத்து வெடிக்க வைத்தனர்.

*1982* ஒக்டோபர் *27*ம் திகதி சாவகச்சேரி காவற்துறை நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தி *3* பேரைச் சுட்டுக்கொன்று, *3* பேரைக் காயப்படுத்தி, பெரும்தொகையான ஆயுதங்களையும் விடுதலைப் புலிகள் கைப் பற்றிச் சென்றனர். இத்தாக்குதலை அடுத்து வடமாகாணத்தின் பல காவற்துறை நிலையங்கள் மூடப்பட்டன. வடக்கில் காவற்துறை நிர்வாகம் நிலைகுலைந்து முடங்கிப் போனது.

*1983* பெப்ரவரி *18*ம் நாள் பருத்தித்துறை காவற்துறை நிலையத்தைச் சேர்ந்த இரண்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். *1983* மார்ச் *4*ம் நாள் பரந்தனருகே உமையாள்புரத்தில் இராணுவத் தொடர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் தொடுத்து நேரடிச் சமரில் ஒரு மணித்தியாலமாக ஈடுபட்டனர். இத்தாக்குதலில் இராணுவக் கவச வண்டி ஒன்று சேதமாக்கப்பட்டதுடன் இராணுவத்தினர் ஐவரும் படுகாயம் அடைந்தனர்.

*1983* ஏப்பிரல் *2*ம் நாள் வடமாகாணத்தில் பாதுகாப்பையும் அமைதியையும் ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்வதற்காக யாழ் அரசாங்க அதிபர் **'பாதுகாப்பு மாநாடு'** ஒன்றைக் கச்சேரியில் நடத்துவதற்குத் திட்டமிட்டு இருந்தபோது மாநாடு தொடங்குவதற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ் கச்சேரிச் செயலகக் கட்டிடத்தைக் குண்டு வைத்துத் தகர்த்தெறிந்து தமது எதிர்ப்பை சிறீலங்கா அரசிற்கு உணர்த்தினர்.

*1983* மே *18*ம் திகதி வடக்கில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடாத்துவதென அறிவிப்பு செய்தது. இத்தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி தலைவர் பிரபாகரன் தமிழீழ மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார், சிறீலங்கா அரசின் தேர்தல் மாயையிலிருந்து விடுபடுமாறும் சிறீலங்காவின் சகல நிர்வாகங்களையும் நிராகரிக்குமாறும் வெகுசன ஆயுதப் போராட்டத்திற்கு அணி திரளுமாறும் வேண்டுகோள் விடுத்தார்.

*1983* ஏப்பிரல் *29*ம் நாள் சிறீலங்கா அரசின் இனவெறி அரசை ஆதரிக்கும் சகல தமிழ்த் துரோகிகளுக்கும் எச்சரிக்கையாக மூன்று ஐ.தே.கட்சி ஆதரவாளர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த இராணுவ நடவடிக்கையின் விளைவாக ஐ.தே.கட்சியின் சார்பில் நின்ற சகல தமிழ் வேட்பாளர்களும் தேர்தலிலிருந்து விலகியதுடன் தமிழர்கள் பலர் ஐ.தே. கட்சியிலிருந்தும் நீங்கிக்கொண்டனர்.

*1983* மே *18*ம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல் வாக்களிப்பு முடிவடைவதற்கு ஒரு மணித்தியாலத்துக்கு முன்பாக நல்லூர் கந்தர் மடத்தில் தேர்தல் சாவடிக்குக் காவலில் நின்ற இராணுவ, காவற்துறைப்படைகளின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதலில்

www.tamilarangam.net



இராணுவத்தினர் ஒருவர் கொல்லப்பட காவற்துறையினர் இருவரும் இராணுவத்தினர் இருவரும் படுகாயம் அடைந்தனர். இராணுவத்திடம் இருந்து தானியங்கு சுரிகுழல் துப்பாக்கி ஒன்றை தமிழீழ விடுதலைப் புலிகள் கைப்பற்றிக் கொண்டனர்.

இவ் வெற்றிகரமான தாக்குதலையடுத்து விடுதலைப் போராளிகள் (அரசாங்கத்தின் மொழியில் பயங்கரவாதிகள்) என்று சந்தேகிக்கும் எவரையும் கண்ட இடத்தில் சுட்டுத்தள்ளவும் பிரேத பரிசோதனை, நீதிமன்ற விசாரணை எதுவுமின்றி சுடப்பட்ட நபர்களின் சடலங்களைப் புதைக்கவும் இராணுவத்துக்கு ஜே.ஆர்.அரசு அதிகாரங்களை வழங்கியது.

1983 யூலை 23ம் நாள் நள்ளிரவில் திருநெல்வேலியிலுள்ள பலாலி வீதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தாக்குதற் படைப் பிரிவு இராணுவத்திற்கு எதிரான திடீர்த் தாக்குதலுக்காகக் காத்து நின்றது. 14 விடுதலைப் புலிகளைக் கொண்ட இப்பிரிவில் தலைவர் பிரபாகரனும் ஒரு போராளியாக நின்று கொண்டு அத்தாக்குதலின் தலைமைப்பொறுப்பை லெப்டினன்ட் செல்லக்கிளியிடம் கொடுத்து இருந்தார். குறிப்பிட்ட இடத்துக்கு இராணுவத்தொடர் வந்ததும் கண்ணிவெடியை வெடிக்க வைத்து தாக்குதல் தொடுக்கப்பட்டது. இத்தாக்குதலில் இராணுவத்தினர் 13 பேர் பலியாகினர். பல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன. தலைவர் பிரபாகரன் மட்டும் இத்தாக்குதலில் இராணுவத்தினர் எழுவரைச் சுட்டுக்கொன்றார்.

இத்தாக்குதல் சிங்கள இராணுவத்தை நிலைகுலையச் செய்தது. இத்தாக்குதல் சம்பவத்தை உடனடிக் காரணமாக எடுத்துக் கொண்ட சிங்கள அரசு ஏற்கனவே திட்டமிட்டிருந்ததன்படி தமிழினப் படுகொலையை இலங்கைத் தீவு அடங்கலும் பரவலாகக் கட்டவிழ்த்து விட்டது. தமிழ் மக்கள் பல ஆயிரம் பேர் கொலைசெய்யப்பட்டனர். தமிழ்ப் பெண்கள் பலர் கற்பழிக்கப்பட்டனர். கொழும்பில் தமிழர்களின் பொருளாதாரத் தளம் முற்றாக அழிக்கப்பட்டது. இவ்வினஒழிப்பு முழுமையாகச் சிங்கள அரசின் அமைச்சர்களினதும் பாராளுமன்ற உறுப்பினர்களதும் அரச படைகளினதும் ஆதரவுடன் நடத்தப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதன் பின்னரே தமிழ்மக்கள் முழுமையாக உணர்ந்து கொண்டனர், தமிழீழத்தை சிறீலங்காவின் ஆட்சி அதிகாரத்தில் இருந்து மீட்டெடுத்து, விடுதலை பெற்ற தமிழீழத்தில், தமிழீழ அரசை நிறுவி வாழ்வது தான் எமக்கும் எமது எதிர்காலச் சந்ததிக்கும் பாதுகாப்பானது என்று. இதனால் ஏற்பட்ட விழிப்புணர்வு தமிழீழ விடுதலைப் போரில் பொது மக்களும் பங்கேற்கும் நிலையை உருவாக்கியது. தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து கொள்ளத் தொடங்கினர்.



www.tamilarangam.net



# பகுதி - 3

# தமிழீழப்போர் I
# ( ஆவணி 1984 - ஆடி 1987 )

ஆடி 1983இல் இலங்கைத் தீவில் சிறீலங்கா அரசு தமிழீழ மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விட்ட இன அழிப்பு நடவடிக்கையால் விழிப்புணர்வு பெற்ற இளைஞர்களும் யுவதிகளும் விடுதலைப்புலிகளுடன் சேர்ந்தனர். விடுதலைப்புலிகளின் கெரில்லா அணிகள் பன்மடங்காகப் பெருகின. இந்நிலையில் தலைவர் பிரபாகரன் கெரில்லா அணிகளைப் புரட்சிகர மக்கள் இராணுவமாகக் கட்டி எழுப்பும் நோக்குடன் அரசியல், இராணுவ அமைப்புக்களை விரிவுபடுத்தும் நடவடிக்கைகளில் இறங்கினார். இதனால் ஆடி 1983இல் இருந்து மாசி 1984வரை இராணுவ நடவடிக்கைகளை இடைநிறுத்தி, பாரிய கெரில்லா இராணுவப் பயிற்சித் திட்டங்களை வகுத்து அரசியல், இராணுவ அமைப்புக்களை விரிவாக்கம் செய்தார்.

தமிழீழப் போர் ஒன்றின் மிகக் கொந்தளிப்பான காலகட்டம் இந்த ஆடி 1983இன அழிப்புடன்தான் ஆரம்பமாகிறது. இந்தக் காலகட்டத்தில் புயலின் மையமாக நின்று, எல்லா எதிர்ப்பியக்கத்திற்கும் ஈடுகொடுத்து, தமிழீழ மக்களின் வீரவிடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்தவர் தலைவர் பிரபாகரன் அவர்கள் தான்.

## இந்தியத் தலையீடு:

இதுவரை காலமும் இலங்கைத் தீவை அதிரவைத்த சம்பவங்களையும் அதன் வரலாற்றுப் போக்கினையும் குறிப்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் பிரபாகரனின் அரசியல், இராணுவ நகர்வுகளையும் மிகவும் உன்னிப்பாக அவதானித்து வந்த இந்திய அரசு அன்றைய பிரதமர் இந்திரா காந்தியின் உத்தரவின் பேரில் ஆடிக்கலவரத்தை ஏதுவாகக் கொண்டு இலங்கைத் தீவின் இனப்பிரச்சினையில் தலையிட முடிவு செய்தது.

1983ஆவணியில், இலங்கைத் தீவை தனது பூகோள-கேந்திர ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவர இந்திய அரசுமுடிவு செய்து,

www.tamilarangam.net




தமிழ்ப் போராளிகளுக்கு ஆயுதமும் பயிற்சியும் அளித்து ஆயுத எதிர்ப்பியக்கத்தைத் தீவிரமாக்கி, சிங்கள அரசுக்கு நெருக்குதல் கொடுத்து, தனது பூகோள நலன்களை சாதித்துக் கொள்ள இந்தியாவின் உளவுப்பிரிவான 'றோ' மூலம் திட்டமிட்டு செயற்பட்டது. அதேநேரத்தில் பல தமிழ் இயக்கங்களுக்குக் கூடிய அளவு ஆயுதங்களும் பயிற்சியும் பண உதவியும் அளித்துவிட்டால் இராணுவ சமபலத்தை மாற்றியமைத்து 'தமிழீழவிடுதலையில்' உறுதியாக நிற்கும் தலைவர் பிரபாகரனையும் விடுதலைப் புலிகள் இயக்கத்தையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரலாம் அல்லது ஒழித்து விடலாம் எனவுந் திட்டமிட்டு இந்திய அரசு செயற்பட்டது

ஆனால் இவையாவற்றையும் நன்கு அவதானித்து அதற்கு ஏற்ப திட்டமிட்ட தலைவர் பிரபாகரன் அவர்கள் இந்தியா விடுதலைப் புலிகளுக்கு செய்யவந்த சிறு உதவிகளைச் பெற்றுக்கொண்ட அதேநேரத்தில் தன் ஆளுமையால் எவருக்கும் தெரியாமல் குறிப்பாக இந்திய அரசுக்கும் அதன் உளவுப்படைக்கும் தெரியாமல் விடுதலைப் போருக்குத் தேவையான பல ஆயுத தளபாடங்களையும் வேறு பொருட்களையும் தமிழீழத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தார்.

பெப்ரவரி *24, 1984*இல் இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமாகின. தலைவர் பிரபாகரனின் தலைமையில் தமிழீழத்தில் ஆயுதப் போராட்டம் தீவிரமடைந்தது. தொடர்ச்சியாகவும் தீர்க்கமாகவும் விடுதலைப் புலிகளின் கெரில்லா அணியினர் பல அதிரடித்தாக்குதல்களை மேற்கொண்டு நூற்றுக்கணக்கான இராணுவத்தினரைக் கொன்றனர். இதனால் கொதிப்படைந்த இராணுவம் அப்பாவிப் பொது மக்களைக் கொன்று குவித்தது. தலைவர் பிரபாகரனின் தலைமையில் விடுதலைப் புலிகள் புரிந்து வந்த போராட்ட சாதனைகளைக் கண்டு தமிழீழ மக்கள் பூரிப்படைந்தனர்.

ஆனால் இந்திய அரசோ கலக்கம் அடைந்திருந்த நிலையில் ஒக்டோபர் *31, 1984* இல் இந்திராகாந்தி தன் மெய்ப்பாதுகாவலர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார். இதனால் அரசியல் அனுபவம் குறைந்த விமான ஓட்டியான இந்திரா காந்தியின் மூத்த மகன் 'ராஜீவ் காந்தி' இந்தியப் பிரதமராக நியமிக்கப்பட்டார். அவர் இலங்கைத்தீவின் இனப் பிரச்சினை பற்றியும் தமிழீழ விடுதலைப் போர் பற்றியும் குறிப்பாக தலைவர் பிரபாகரன் பற்றியும் மிகவும் தவறான எண்ணங்கள் கொண்டு செயற்படத் தொடங்கினார். தமிழீழ மக்களின் உயிர்வாழும் உரிமை இலங்கைத்தீவில் சிறீலங்கா அரசால் பறிக்கப்பட்டுள்ளது என்ற உண்மையைப் புரிய மறுத்த ராஜீவ் காந்தி பதவியேற்ற காலம் முதல் தமிழீழ விடுதலைக்கு எதிராக, சிறீலங்கா அரசுக்குச் சார்பாகச் செயற்படத் தொடங்கினார். இதில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளை வழிநடத்தி வந்த தலைவர் பிரபாகரனுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் குறிப்பாக ராஜீவ் காந்திக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டது.

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் தனது முப்பத்தொராவது வயதில் தமிழீழத்தைச் சேர்ந்த மதிவதனி என்ற பெண்ணை 1984ம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார்.



**துணைவி மதிவதனி மகன் சாள்ஸ் அன்ரனியுடன்**

www.tamilarangam.net



## திம்பு பேச்சுவார்த்தை

ராஜீவ் காந்தியின் தலைமையில் இந்திய அரசு இலங்கைத்தீவின் இனப்பிரச்சினையை தன் விருப்பத்துக்கு ஏற்ப கையாளத்தொடங்கி, *1985*இன் ஆரம்பத்திலிருந்தே தலைவர் பிரபாகரனின் தலைமையில் கெரில்லா நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அழுத்தங்களைப் போட்டு, *1985*யூன் *18*இல் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் சிங்கள ஆயுதப் படைகளுக்கும் இடையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்தியது. இதனைத் தொடர்ந்து அதே ஆண்டின் ஆடிமாத முற்பகுதியில் இந்திய அரசின் மத்தியத்துவத்தின் கீழ் பூட்டான் தலைநகர் திம்புவில் பேச்சுக்கள் ஆரம்பமாயின. சகல தமிழ் குழுக்களும் கலந்து கொண்டன. தமிழர் தேசியம் தமிழர் தாயகம் தமிழர் தன்னாட்சி உரிமை என்ற அடிப்படைக் கோட்பாடுகளை அங்கீகரித்து தமிழீழ மக்களின் தேசியப் பிரச்சினைக்கு ஒரு தீர்வுத் திட்டம் முன்வைக்க வேண்டும் என்ற விடுதலைப் புலிகளின் கோரிக்கையை மற்றைய தமிழ் குழுக்களும் ஏற்றுக் கொண்டன. ஆனால் இக்கோரிக்கையைச் சிங்கள அரசு நிராகரித்தது. இப்படியாகச் சிக்கலடைந்த திம்புப் பேச்சுவார்த்தைகள், போர் நிறுத்தத்தை மீறி சிங்களப்படைகள் திருகோணமலையிலும் வவுனியாவிலும் நடாத்தி முடித்த தமிழினப்படுகொலையில் *200* இற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து முறிவடைந்தன. இந்நேரத்தில் தமிழீழத்தில் தன் தளபதிகளுடன் தலைவர் பிரபாகரன் போர் நிறுத்தம் பேச்சுவார்த்தை பற்றிய நிலைப்பாடுகள் குறித்து கலந்துரையாடிக்கொண்டிருந்தார்.

பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இந்தியாவிலிருந்து நாடு கடத்தப்பட்டார். இதனால் தலைவர் பிரபாகரனுக்கும் இந்திய அரசுக்கும் இடையில் பாரிய முரண்பாடும் இடைவெளியும் ஏற்பட்டது. ஆனால் இந்தியா பற்றிய தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை தலைவர் பிரபாகரன் பின்வருமாறு தெளிவாக கூறியிருக்கிறார்,**"எமக்கு இந்தியாவின் உதவியும் நல்லெண்ணமும் அவசியம். அதேவேளையில் இந்தியா தனது தீர்வைத் தமிழீழ மக்கள் மீது திணிப்பதை நாம் விரும்பவில்லை. தங்களது எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் முழு உரிமையும் எமது மக்களுக்கு உண்டு"** என்று.

ஆனால் இந்திய அரசும் அதன் பிரதமரும் தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழீழ மக்களின் விடுதலையில் எவ்வளவு உறுதியாக இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்ளாமல் அப்போதைய தமிழக முதல்வருக்கு அழுத்தங்களைக் கொடுத்து, *1986*ம் ஆண்டு அக்டோபரில் தமிழக காவற்துறை மூலம் தமிழகத்தில் விடுதலைப்புலிகள் வைத்திருந்த தகவல் தொடர்புச் சாதனங்களைப் பறித்தார்கள். தலைவர் பிரபாகரனையும் மற்றைய போராளிகளையும் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்று குற்றவாளிகளை நடத்துவது போன்று நடத்தினார்கள்.

## சாகும்வரையிலான உண்ணாவிரதம்



இந்நிலையில் தலைவர் பிரபாகரன் என்ன செய்யப்போகிறார் என்பது ஒரு பெரும் கேள்விக்குறியாக இருந்தது.

ஆயுதப் போராட்ட இயக்கத்தின் தளபதி,

www.tamilarangam.net



சிங்களப்படைகளின் சிம்ம சொப்பனமான தலைவர் பிரபாகரன், அனைவரும் எதிர்பார்த்ததுக்கு மாறாக தமிழக காவற்துறையினர் தங்களிடம் இருந்து பறித்த தகவல் தொடர்புச் சாதனங்களைத் திருப்பித்தரவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து நீர், ஆகாரம் இன்றி சாகும்வரையிலான உண்ணாவிரதத்தை 1986ம் ஆண்டு நவம்பர் 22ம் திகதி தொடங்கினார். அவரின் இந்தச் செயல் அனைவரையும் அதிர்ச்சியடையவைத்தது. தலைவர் பிரபாகரனின் மன உறுதியைப் புரிந்து கொண்ட இந்திய அரசு கோரிக்கையை ஏற்றுத் தகவல் தொடர்பு சாதனங்களைத் திருப்பிக் கொடுத்தது. உண்ணாவிரதம் கைவிடப்பட்டது. இவ் உண்ணாவிரதம் குறித்து அப்போது சில பத்திரிகையாளர்கள் தலைவர் பிரபாகரனிடம் வினாத்தொடுத்தார்கள்.

**பத்திரிகையாளர்:-**

உங்களுடைய அகிம்சைப் போராட்டத்துக்கு வெற்றி கிடைத்திருக்கும் போது இலங்கையிலும் அகிம்சை முறையிலே போராடலாமே, ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய அவசியம் ஏன்? என்று கேட்டார்கள்.

**தலைவர் பிரபாகரன்:-**

"உலகிலேயே தன்னுடைய சுதந்திரத்தைப் பெறுவதற்கு அகிம்சைமுறையில் போராடி வெற்றி பெற்ற நாடு இந்தியா. எனவே அகிம்சைப் போராட்டத்தின் மகத்துவத்தைப் புரிந்திருக்கிற இந்தியாவில் எனது அகிம்சைப் போராட்டத்திற்கு வெற்றிகிடைத்திருக்கிறது. ஆனால் மனிதநேயமற்ற இனவெறிச் சிங்கள அரசிடம் அகிம்சை முறை எடுபடாது. எனவேதான் தமிழீழத்தில் நாங்கள் ஆயுதம் ஏந்திப் போராடுகிறோம்" என்றார்.

## பெங்களூர் மாநாடு


இதற்கு பின் பெங்களூரில் நடந்த சார்க் மாநாட்டில் கலந்து கொள்ள சிங்கள அரசின் சனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா வந்த போது அவருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட என தமிழகத்திலிருந்த தலைவர் பிரபாகரனை மட்டும் அவரது அரசியல் ஆலோசகர்களுடன் அழைத்துச் சென்றனர். "வடக்கு மாகாணத்தைத் தனியாகவும் கிழக்கு மாகாணத்தைத் தமிழர்,சிங்களவர், முஸ்லிம் என்ற ரீதியில் மூன்று பகுதிகளாகவும் பிரிக்கலாம்" என்று ஜே.ஆர். ஜெயவர்த்தனா சொன்னதாக தலைவர் பிரபாகரனிடம் இந்திய அரச தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் தலைவர் பிரபாகரனோ **"வடக்கு கிழக்கு மாகாணங்கள் இரண்டாக இருப்பதனை ஒன்றாக இணைக்கவேண்டும் என்பதை நாங்கள் வற்புறுத்திக் கொண்டிருக்கும்போது, இரண்டை நாலாக கூறுபோடும் யோசனையை நாங்கள் எப்படி ஏற்கமுடியும்"** என்று கூறி நிராகரித்து விட்டார்.

அத்துடன் இந்த பெங்களூர் பேச்சுவார்த்தையில் தான், தலைவர் பிரபாகரனுக்கு முதல் அமைச்சர் பதவி தருவதாக ஜே.ஆர். ஜெயவர்த்தனா இந்திய அரசுக்கூடாக தெரிவித்தார்.

இதற்கு தலைவர் பிரபாகரன் **"இது ஒரு மாயவலை, தமிழ் இனத்தை அழிப்பதற்கு வேறுவகையாகப் பின்னப்பட்ட சதிவலை. அதிகாரங்கள் எதுவுமற்ற, நினைத்தால் சனாதிபதியால் கலைக்கக்கூடிய மக்களுக்கு எந்த வித நன்மையும் செய்யமுடியாத பொம்மைப் பதவிதான் முதல் மந்திரிப்பதவி"** என்று கூறி அதனைத் தூக்கி எறிந்துவிட்டார்.

## தமிழீழம் திரும்புதல்



www.tamilarangam.net



தமிழ் நாட்டில் இருக்கும் வரை தனக்கு மத்திய -மாநில அரசுகளின் நிர்ப்பந்தம் இருந்து கொண்டேயிருக்கும். இந்திய அரசுடன் பேசவரும்போது டில்லியிலோ அல்லது சென்னையிலோ தன்னைக் கொலை செய்து தமிழீழப் போரை அழிக்க முயற்சிக்கலாம். மொத்தத்தில் தமிழ் நாட்டில் இருக்கும்வரை ஆபத்து நீடிக்கவே செய்யும். எனவே தமிழீழம் திரும்பிச் செல்வதன் மூலம் விடுதலைப் போர் மேலும் வலுவடையும் என்ற உறுதியான முடிவில் தலைவர் பிரபாகரன் 1987ம் ஆண்டு சனவரி 3ம் திகதி தமிழீழம் திரும்பினார்.

தலைவர் பிரபாகரன் தமிழீழம் திரும்பியதனை அறிந்த சிறீலங்கா அரசும் அதன் படைகளும் கலக்கம் அடைந்தவேளையில், இந்திய அரசும் அதன் உளவுப்படையும் குழப்பம் அடைந்தன. இனி எவ்விதம் இலங்கைத் தீவின் இனப் பிரச்சினையில் தலையிடுவது என்று குழம்பிய நிலையில் சிறீலங்காப்படைகளின் சில மூர்க்கத்தனமான இராணுவ நடவடிக்கைகளுக்கு மறைமுகமாக ஒத்துழைத்து அதன்மூலம் தமிழீழமக்களுக்கு ஏற்படும் பாரிய அழிவுகளில் இருந்து அவர்களை மீட்கும் **"இரட்சகர்"** என்ற போர்வையில் தமிழீழத்தில் தன் இராணுவத் தலையீட்டை மேற்கொள்ளலாம் எனத்திட்டமிட்டு இந்திய அரசு செயற்பட்டது.

1987மே 1ம் திகதி உலகத் தொழிலாளர் தினத்தை முன்னிட்டு தலைவர் பிரபாகரன் அவர்கள் தமிழீழமக்களுக்கு ஆற்றிய உரையில், **"நாம் போராடி, இரத்தம் சிந்தி, எமது விடுதலையை வென்றெடுக்கவேண்டும். எமக்கு வேறு வழியே இல்லை. ஒன்று அடிமைகளாக அழிந்தொழிய வேண்டும் அல்லது போராடிச் சுதந்திரமாக வாழ வேண்டும். இதுதான் எமது அரசியல் தலைவிதி. இன்று இந்தத் தொழிலாளர் தினத்தில் நாம் ஒரு உறுதி செய்து கொள்வோம். அதாவது சுதந்திர தமிழீழ தனி அரசுதான் எமது பிரச்சினைக்கு ஒரே தீர்வு. இறுதியான தீர்வு. இந்தத் தனி அரசை அமைக்க நாம் எமது உயிர், உடல், ஆன்மாவை அர்ப்பணித்துப் போராடுவோம். இது எமது தொழிலாளர் தினப் பிரகடனமாக அமையட்டும்"** என்றார்.

## தமிழீழத்தில் இந்தியாவின் நேரடி இராணுவத் தலையீடு

1987ம் ஆண்டு யூலை 24ம் திகதி இந்திய அதிகாரிகள் சிலர் தலைவர் பிரபாகரனை யாழ்ப்பாணத்தில் சந்தித்து "இந்தியாவின் பிரதமர் ராஜீவ் காந்தி உங்களைச் சந்தித்து முக்கியமான விடயமாகப் பேசவிரும்புவதாக" கூறித் தலைவர் பிரபாகரனை டில்லிக்கு அழைத்து செல்ல முயன்றார்கள், அவசரப் படுத்தினார்கள்.

இந்நிலையில் தமிழீழ மக்களுக்குத் தலைவர் பிரபாகரன் ஒரு அறிக்கையை வெளியிட்டார். அதில் **"இன்று தமிழ் மக்கள் தங்கள் இலட்சியத்தை வென்றெடுக்கும் ஒரு தலைமையைப் பெற்றிருக்கிறார்கள் என்பதை அறுதியிட்டுக் கூறுகின்றேன். நீங்கள் எனக்கு அளித்து வரும் பொறுப்புகளை நான் நேர்மையாகவும் உண்மையாகவும் உறுதியுடனும் செய்வேன் என நம்புகிறேன். தற்காலத்தில் காணப்படும் இடைக்கால தீர்வுகள் எமது பிரச்சினையின் தீர்வாக அமையாது. எனவே தமிழ் மக்களின் நிரந்தரமான, நிம்மதியான, சுபீட்சமான எதிர்காலத்தை உறுதிப்படுத்தும் நிரந்தர தீர்வுக்காகவே நான் பாடுபடுகின்றேன். இத் தீர்வு தமிழீழம் என்றே நான் நம்புகின்றேன். இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் விசேட அழைப்பின் பேரிலேயே நான் தமிழீழத்தைவிட்டு உத்தியோகபூர்வமாக இந்தியா செல்கின்றேன்"** என்று கூறிவிட்டு இந்திய அரசு அனுப்பியிருந்த இராணுவ கெலிகொப்டரில் டில்லிக்கு புறப்பட்டார். போகும் வழியில் தமிழகத்தின் முதலமைச்சர் எம்.ஜி. ஆரை சந்தித்துப் பேசினார். அப்போதும் எதற்காக இந்த அவசர அழைப்பு என்பது யாருக்கும் தெரிந்திருக்கவில்லை.டில்லிசென்ற தலைவர் பிரபாகரனையும் அவரது ஆலோசகர்களையும் 'அசோகா

www.tamilarangam.net



ஹொட்டலில்' தங்க வைத்தனர்.

இந்தியாவின் சிறீலங்காவுக்கான தூதுவர் தீட்சித், இந்திய வெளிநாட்டுத்துறைச் செயலாளர் மேனன் உட்படப் பல அதிகாரிகள் தலைவர் பிரபாகரனைச் சந்தித்து இந்தியாவும் சிறீலங்காவும் செய்து கொள்ளவிருக்கும் **'ஒப்பந்தம்'** பற்றி முதன் முதலாகத் தெரிவித்தார்கள். இதைக் கேட்டதும் தலைவர் பிரபாகரன் அதிர்ச்சி அடைந்தார்.

ஒப்பந்தத்தின் பிரதிகளை அவரிடம் கொடுத்து விட்டு உடனே திரும்பப் பெற்றுக் கொண்டார்கள். இந்த ஒப்பந்தத்தினை ஏற்க முடியாது என்று தலைவர் பிரபாகரன் மறுத்தார். தலைவர் பிரபாகரனை சம்மதிக்க வைக்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் தலைவர் பிரபாகரன் உறுதியாக ஒப்பந்தத்தை ஏற்க மறுத்துவிட்டார். இந்தியப்பிரதமர் சந்திக்க விரும்புவதாக கூறி அழைத்துச் சென்றவர்கள், பிரதமரும் தலைவர் பிரபாகரனும் சந்திக்க ஏற்பாடுகள் செய்யவில்லை. இடையில் நான்கு நாட்கள் பறந்தோடின.

தலைவர் பிரபாகரன் ஒப்பந்தத்தை ஏற்க மறுத்துவிட்டார் என்பது திட்டவட்டமாகத் தெரிந்ததும் தமிழகத்தில் இருந்த இந்தியாவின் அடிவருடிகளான மற்றைய தமிழ் குழுக்களின் பிரதிநிதிகள் டில்லிக்கு அழைத்து வரப்பட்டனர். சொல்லிவைத்தபடியே ஒப்பந்தத்துக்குச் சம்மதம் தெரிவித்தார்கள். விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைத் தவிர மற்றவர்கள் அனைவரும் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டு விட்டார்கள் என்று இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி அறிவித்தார். யார் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட யூலை 29ம் திகதி கொழும்பு செல்லப்போவதாகவும் அறிக்கைவிட்டார்.

இதற்குப் பின்னர் தலைவர் பிரபாகரனை இந்தியப் பிரதமர் சந்தித்தார். அப்போது தலைவர் பிரபாகரன் ஒப்பந்தத்திலுள்ள பலகுறைகளைச் சுட்டிக்காட்டினார். ஆனால் தலைவர் பிரபாகரன் இந்த ஒப்பந்தத்திற்குச் சம்மதம் தெரிவித்து விட்டதாகப் பொய்யான செய்திகள் இந்திய அதிகாரிகளால் தொடர்பு சாதனங்களுக்குக் கொடுக்கப்பட்டன. உடனே தலைவர் பிரபாகரன் அதை மறுத்து அறிக்கை வெளியிட்டார். தலைவர் பிரபாகரன் தங்கியிருந்த அசோகா ஹொட்டலைச் சுற்றி **"கறுப்புப் பூனைகள்"** என்ற இந்திய கொமாண்டோப் படைப்பிரிவினர் காவலுக்கு நிறுத்தப்பட்டனர்.

## இந்திய - சிறீலங்கா ஒப்பந்தம்

1987ம் ஆண்டு யூலை 29ம் திகதி தமிழீழ மக்களின் ஒப்புதல் இன்றி,தமிழீழ விடுதலைப்புலிகளின் ஒப்புதல் இன்றி தமிழீழமக்களின் விடுதலையே தன் உயிர்மூச்சு என்று சொல்லி தமிழீழ விடுதலைப் போரை வழிநடத்திச் செல்லும் தலைவர் பிரபாகரனின் ஒப்புதல் இன்றி அவரை டில்லியில் ஹொட்டலில் பூட்டி வைத்து விட்டு, பிராந்திய வல்லரசு என்ற இறுமாப்புடன் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சிறீலங்காப் பிரதமர் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுடன் இந்தியாவின் பூகோள நலனுக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்து இட்டார். இந்திய இராணுவம் தமிழீழப் பகுதிகளுக்கு **"அமைதிப்படை"** என்ற பெயரில் அனுப்பப்பட்டது.

ஒப்பந்தம் செய்துவிட்டு இந்தியா திரும்பிய இந்தியப்பிரதமர் தலைவர் பிரபாகரனைச் சந்தித்துச் சில உறுதிமொழிகளை அளித்தார். இந்த உறுதிமொழிகளைப் பெற்றுக் கொண்ட தலைவர் பிரபாகரன் தமிழீழம் திரும்பினார்.

## சுதுமலைப் பிரகடனம்



www.tamilarangam.net



இந்திய - சிறீலங்கா ஒப்பந்தம் தொடர் பாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை சுதுமலையில் நடந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கூட்டத்தில் பல லட்சம் தமிழ் மக்கள் இந்திய இராணுவத் தளபதிகள், பத்திரிகையாளர்கள் முன்னிலையில் தலைவர் பிரபாகரன் தெளிவுபடுத்தினார். அதில் **"எம்மக்களது விடுதலைக்காக எம்மக்களது விமோசனத்துக்காக நாங்கள் ஏந்திய ஆயுதங்களை இந்திய அரசிடம் ஒப்படைக்கிறோம். நாம் இந்த ஆயுதங்களை ஒப்படைக்கும் கணத்திலிருந்து எமது மக்களாகிய உங்களின் பாதுகாப்புப் பொறுப்பையும் இந்தியாவிடம் ஒப்படைக்கிறோம். தமிழீழ மக்களின் ஒரே பாதுகாப்புச் சாதனமாக இருந்து வந்த இந்த ஆயுதங்களை இந்திய அரசு எம்மிடத்திலிருந்து பெற்றுக்கொள்வதிலிருந்து தமிழீழ மக்களின் பாதுகாப்பு என்ற பெரும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறது. ஆயுதக் கையளிப்பு என்பது இந்தப் பொறுப்பு மாற்றத்தைத்தான் குறிக்கிறது. நாம் ஆயுதங்களைக் கையளிக்காது போனால் இந்திய இராணுவத்துடன் மோதும் துர்ப்பாக்கிய சூழ்நிலை ஏற்படும். இதை நாம் விரும்பவில்லை. தமிழீழத் தனியரசே தமிழீழமக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை அளிக்கும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கையுண்டு. தமிழீழ இலட்சியத்துக்காகவே நான் தொடர்ந்து போராடுவேன். தமிழீழ மக்களின் நலன் கருதி இடைக்கால அரசில் பங்குபற்ற அல்லது தேர்தலில் போட்டியிட வேண்டிய சூழ்நிலை எமது இயக்கத்திற்கு ஏற்படலாம். ஆனால் நான் எந்தக் கால கட்டத்திலும் தேர்தலில் பங்குபற்றப் போவதில்லை. இதை நான் மிகவும் உறுதியாகச் சொல்ல விரும்புகிறேன்"** என்றார்.

இதன் பின்னர் தலைவர் பிரபாகரனின் உத்தரவின் பேரில் ஆயுதங்கள் பலாலி இராணுவ முகாமில் வைத்து இந்திய இராணுவத்திடம் கையளிக்கப்பட்டது.

ஆனால் இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்தி, தலைவர் பிரபாகரனுக்குக் கொடுத்த எந்தவொரு வாக்குறுதியையும் நிறைவேற்றாது இழுத்தடித்து வந்ததோடு, தமிழ்த் துரோகக் குழுக்களை தமிழீழப்பகுதிகளில் கொண்டு வந்துவிட்டு தமிழீழவிடுதலைப் புலிகளுக்கும் தமிழீழ மக்களுக்கும் எதிரான செயல்களைப் புரிய அவர்களை ஏவிவிட்டார்.

## திலீபனின் தியாகச்சாவு



இந்நிலையில் விடுதலைப் போரை அடுத்த கட்டத்துக்கு நகர்த்தவும் இந்தியாவின் "இரட்சகர்" என்ற போலி வேடத்தை மக்களுக்கு புரியவைக்கவும் தலைவர் பிரபாகரனின் அனுமதியுடன் தியாகி திலீபன், இந்திய -சிறீலங்கா ஒப்பந்தத்தில் இருந்த 5 விடயங்களை நிறைவேற்றும் படி கூறி நீராகாரம் இன்றி சாகும்வரையிலான உண்ணா விரதத்தை 1987செப்டெம்பர் 15ம் திகதி ஆரம்பித்தார். இந்தியாவின் துரோகப்போக்கினால் செப்டெம்பர் 26இல் லெப்டினன் கேர்ணல் திலீபன் வீரச்சாவடைந்தார்.

லெப்டினன் கேர்ணல் திலீபனின் வீரமரணம் குறித்து தலைவர் பிரபாகரன் வெளியிட்ட அறிக்கையில் **"வடக்கு கிழக்கு அடங்கிலுமுள்ள தமிழ் பேசும் மக்கள் அனைவரும் விடுதலைப்புலிகள் முன்னெடுக்கும் இந்தச் சாத்வீகப் போராட்டத்தில் அணிதிரள வேண்டும். மக்களின் ஒன்று திரண்ட சக்தி மூலமே மக்களின் ஒருமுகப்பட்ட எழுச்சி மூலமே நாம் எமது உரிமைகளை வென்றெடுக்கலாம். திலீபனின் ஈடுஇணையற்ற தியாகத்திற்கு நாம் செய்யும் பங்களிப்பு இதுதான்"** என்றார்.

www.tamilarangam.net




## 12 போராளிகள் வீரமரணம்



திலீபனின் மரணத்தைத் தொடர்ந்து பருத்தித்துறைக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகள் இருவர் உட்பட 17 போராளிகள் சிறீலங்கா கடற்படையால் கைது செய்யப்பட்டுப் பலாலி முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டுத் தடுத்து வைக்கப் பட்டனர். "போர் நிறுத்த நேரத்தில், பொது மன்னிப்பு வழங்கப்பட்ட சூழ்நிலையில் விடுதலைப் புலிகளின் தளபதிகளும் போரா ளிகளும் கைது செய்யப்பட்டது இந்திய - சிறீலங்கா ஒப்பந்தத்திற்கு முற்றிலும் முரணா னது" என தலைவர் பிரபாகரன் இந்திய அரசு க்குக் கடும் ஆட்சேபம் தெரிவித்துப் போரா ளிகளை உடன் விடுவிக்குமாறு இந்திய, சிறீலங்கா அரசுகளைக் கேட்டுக்கொண்டார்.

ஆனால் இந்திய அரசின் துரோகத்தால் 17 போராளிகளும் சயினைட் உட்கொண்ட னர். அவர்களில் 12 போராளிகள் வீரச்சாவை அணைத்துக்கொண்டனர். இதுபற்றி மக்களு க்கு தலைவர் பிரபாகரன் விடுத்த அறிக்கை யில் **"எமது போராளிகளை விடுவிக்க வேண் டுமென இந்திய அரசு சிறீலங்கா சனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் உறுதியாகச் சொல்லி யிருந்தால் இந்த அநியாயமான சாவுகள் நிகழ்ந்தே இருக்காது. இந்த வகையில் எமது போராளிகளுக்கும் மக்களுக்கும் பாதுகாப் பளிக்கும் பொறுப்பிலிருந்து இந்திய அரசு தவறிவிட்டது. எமக்குப் பாதுகாப்பளிக்கும் அதிகாரமும் பொறுப்பும் தார்மீகக் கடமைப் பாடும் இந்தியாவுக்கு இல்லை என்றால் இந்திய சமாதானப்படைகள் இங்கிருப்பதில் அர்த்தமென்ன? சனாதிபதி ஜெயவர்த்தனா வுக்கும் சிங்கள இராணுவத்துக்கும் சமூகவி ரோத இயக்கங்களுக்கும் பாதுகாப்பளித்து விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டத் துணைபோவதுதான் இந்திய சமாதானப் படைகளின் நோக்கமா? எமது தலைவர்களு க்கும் போராளிகளுக்கும் பாதுகாப்பு அளிப்ப தற்குப் பதில் அவர்களைச் சிங்கள இராணு வத்திடம் ஒப்படைக்கத் துணைபோனது இந்திய சமாதானப்படையினர் எமது மக்க ளுக்கு இழைத்த மன்னிக்கமுடியாத குற்றம். இந்த சூழ்நிலையில்தான் நாம் இனி யுத்த நிறுத்தத்தைப் பேணுவதில்லை என முடி வெடுத்தோம்"** என்றார்.



www.tamilarangam.net



# பகுதி - 4



# இந்திய - தமிழீழப்போர்

1987 ஒக்டோபர் 10ம் நாள் இந்திய - தமிழீழப் போர் எவ்வாறு ஆரம்பித்தது என் பதை அப்போதைய தமிழக முதல்வர் எம்.ஜீ. இராமச்சந்திரனுக்கு 1987 ஒக்டோபர் 11ம் திகதி தலைவர் பிரபாகரன் எழுதிய கடிதத் தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார் **"எமது தளபதிகளும் போராளிகளும் அநியாயமாகக் கொலையுண்ட சம்பவத்தின் எதிரொலியாக தமிழீழம் எங்கும் வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்கின. இனமோதல்கள் வெடித்தன. இந்த வன்முறை முயற்சிகளுக்கு நாம் தான் காரணம் என்றும் நாம் ஒப்பந்தத்தை முறிக்க முயன்றதாகவும் இந்தியா எம்மீது அபாண்ட மான பழிகளைச் சுமத்தியது. இதனைத் தொடர்ந்து கொழும்பில் இந்திய பாதுகாப்பு மந்திரி திரு.பந்த், இந்திய தூதுவர் திரு தீட்சித், இந்திய இராணுவத்தளபதி லெப்டி னன் ஜெனரல் சுந்தர்ஜி ஆகியோர் ஒருபுற மும்,சிறீலங்கா சனாதிபதி ஜெயவர்த்தனா, தேசியபாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலி மறுபுறமும் விடுதலைப் புலிகளை ஒழித்துக் கட்டும் ஒரு சதித்திட்டத்தை உருவாக்கினர். விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை- செய்வது என்றும் எமது போராளிகளுக்கு பொதுமன்னிப்பு இல்லையென்றும் ஜெயவர் த்தனா அறிவித்தார். விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் கடும் இராணுவ நடவடிக்கை எடுக்க இந்தியா முடிவு செய்திருப்பதாக திரு.பந்த் அறிவித்தார். இதனைத் தொடர்ந்து இந்திய சமாதானப்படை விடுதலைப்புலிகள் மீது ஒரு விஷமத்தனமான தாக்குதலைத் தொடங்கியது. 1987 ஒக்டோபர் 10ம் திகதி காலை அமைதிப்படையினர் யாழ்ப்பாண நகரிலுள்ள இரு தமிழ்த் தினசரிப் பத்திரி கைக் (ஈழமுரசு, முரசொலி) காரியாலங்களு க்குள் புகுந்தனர். பத்திரிகை ஊழியர்களைக் கைது செய்தனர். பின்னர் பத்திரிகை அச்சு இயந்திரத்திற்குள் வெடிகுண்டுகளை வைத்து அவற்றைத் தகர்த்தனர். அதன்பின் நண்பகல் விடுதலைப்புலிகளை வேட்டையாடி அழிக் கும் நோக்குடன் கோட்டை இராணுவ முகா மில் இருந்த இந்திய அமைதிப்படையினர்**

www.tamilarangam.net




**யாழ் நகருக்குள் பிரவேசிக்க முயன்றனர். அவர்களை நாம் தடுக்க முயன்றோம். அவர்கள் எம்மை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். நாம் எமது தற்பாதுகாப்புக்காகத் திருப்பிச் சுட்டோம், போர் மூண்டது. இந்திய இராணுவம் பீரங்கி, டாங்கி போன்ற கனரக ஆயுதங்கள் சகிதம் குடியிருப்புக்கள் நிறைந்த பகுதிகள் மீது மணிக்கணக்கான தாக்குதல்களை நடத்தினர். தொடர்ந்தும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதனால் எமது போராளிகள் மட்டுமன்றி பொது மக்கள் பலரும் பெருமளவில் மடிந்து கொண்டிருக்கிறார்கள். பொது மக்கள் கொல்லப்பட்டாலும் பரவாயில்லை, விடுதலைப் புலிகளை அழித்து விடவேண்டுமென்று கங்கணம் கட்டி நிற்கிறது இந்திய இராணுவம். நாலாபக்கமும் முற்றுகையிடப்பட்ட நிலையில் நாம் எமது தற்பாதுகாப்பிற்காக போராடி வருகின்றோம். உயிருடன் கைதாகி அவமானப்பட்டுச் சாவதைவிட போராடி இறப்பதே மேலான்து என்ற இலட்சியத்துடன் நாம் துப்பாக்கி ஏந்தியுள்ளோம்."**

யுத்தம் தீவிரமாக நடைபெற்றது. யாழ் குடாநாட்டைக் கைப்பற்ற இந்தியப்படை ஒரு மாதகாலம் போரிட்டது. இப்போரைத் தலைவர் பிரபாகரன் தலைமையேற்று விடுதலைப் புலிகளை வழிநடத்தினார். தொடர்ச்சியான கெரில்லாப் போர்முறைதான் இனிமேல் இந்தியப்படையை எதிர்கொள்ளத் தகுந்த போர்முறை எனத் தீர்மானித்து, தலைவர் பிரபாகரன் தன் போராளிகளுடன் தமிழீழக் காடுகளுக்குச் சென்றார்.

கெரில்லாப் போர் தொடர்ந்தது. இந்தியப் படையினர் தரப்பில் பெரும் சேதம் ஏற்பட்டது. விடுதலைப் புலிகளை எதிர்கொள்ளத் திராணியற்ற இந்தியப்படை பொதுமக்கள் மீது தனது வெறித்தனத்தைக் கட்டவிழ்த்து விட்டுப் பொதுமக்கள் பலரைக் கொன்று குவித்தது. பெண்கள் பலரைக் கற்பழித்துக் கொலை செய்தது.

இந்தப்போர் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் தலைவர் பிரபாகரன் *12.10.1987* இலும் *14.10.1987*இலும் *13.01.1988* இலும் இந்தியப்பிரதமர் ராஜீவ்காந்திக்குப் போர் நிறுத்தத்தை மேற்கொண்டு தமக்கு அளித்த உறுதிமொழிகளின் படி இடைக்கால அரசைத் தமிழ்ப்பகுதிகளில் நிறுவினால் தாம் ஆயுதங்களை ஒப்படைக்கத் தயாராக இருப்பதாக உறுதியளித்துக் கடிதம் அனுப்பினார்.ஆனால் ராஜீவ் காந்தி தலைவர் பிரபாகரனைக் கொன்று, தமிழீழ விடுதலைப் புலிகளை அழித்து 'தமிழீழ விடுதலை என்ற அரசியல் இலட்சியத்தை அறவே ஒழித்துவிட வேண்டும் என்ற வெறியுடன் தன்னுடைய ஆயுதப்படைகளை இலட்சக்கணக்கில் தமிழீழத்தில் இறக்கிவிட்டார். போர் தொடர்ந்தது.

## தமிழீழத் தேசியத் தலைவர்



'தமிழீழ விடுதலை' என்று சொல்லிக் கொண்டு ஆயுதம் தூக்கிப் போராடப் புறப்பட்ட தமிழ்க்குழுக்கள் எல்லாம் தமிழீழ மக்களுக்குத் துரோகம் செய்து, 'தமிழீழவிடுதலை' என்ற இலட்சியத்தைக் கைவிட்டு இந்திய, சிறீலங்கா அரசுகளின் கைக்கூலிகளாக மாறிச் செயற்படத் தொடங்கினர்.

ஆனால் தலைவர் பிரபாகரனோ சாதி, சமய, பிரதேச வேறுபாடு இன்றி, தமிழீழ மக்கள் அனைவரையும் ஒன்றிணைத்து, இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக

www.tamilarangam.net



தமிழீழவிடுதலைப் போரை முன்னெடுத்தார்.உலகம் பார்த்து வியந்து நிற்க சின்னஞ் சிறிய தமிழீழ தேசம் வீராவேசத்துடன் போரிட்டது. இலங்கைத் தீவில் அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிராக நடைபெறும் போரை தலைமைதாங்கி நடத்தும் ஒப்பாரும் மிக்காரும் அற்ற முதல் தலைவன் பிரபாகரன்தான் என்று சிறீலங்கா நாட்டு சிங்கள மக்களும் புகழ்ந்தனர். இப்போர் உக்கிரமாக நடைபெற்ற காலப் பகுதியில் அதாவது 1988ம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து தலைவர் பிரபாகரன் என்ற நிலை மாறி **'தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன்'** என தமிழ் மக்கள் தமிழீழத்திலும் உலகெங்கிலும் அழைக்கத்தொடங்கினர்.


## அன்னை பூபதி தியாகச் சாவு




இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகத் தாய்க்குலம் எழுச்சி கொண்டு போராடப் புறப்பட்டபோது தென் தமிழீழத்தில் உள்ள மட்டக்களப்பில் அன்னை பூபதி தன் வயிற்றினில் போர் தொடுத்து சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை தொடங்கினார். போரை நிறுத்து, விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்து என்று இந்திய அரசுக்குக் கூறி உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினார். ஆனால் காந்தீயம் பற்றி புகழ்ந்துரைக்கும் இந்திய தேசத்து பிரதமர் அன்னை பூபதியின் உண்ணாவிரதத்தை எள்ளிநகையாடினார். அன்னை பூபதி *19-04-1988* **'தியாகச் சாவு'** அடைந்தார்.

அன்னை பூபதியின் தியாகச் சாவு பற்றி அறிக்கை ஒன்றை தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் விடுத்தார் அதில், **"எமது புனித விடுதலைப் போராட்டத்தில் வரலாற்றுக் காவியமாகிவிட்ட எமது தியாகிகளில் அன்னை பூபதி ஓர் உன்னத இடத்தைப் பெறுகிறார். ஒரு பெண்ணாக, ஒரு தாயாக, ஒரு குடும்பத்தின் தலைவியாக வாழ்ந்து வந்த சாதாரண வாழ்க்கையைத் துறந்து, சாதாரண பற்று உறவுகளைத் துறந்து, தனது சமூகத்தின் சுபிட்சத்திற்காக, தனது இனத்தின் விடுதலைக்காக அவர் தனது உயிரை அர்ப்பணித்தார். இந்திய இராணுவ அடக்குமுறைக்கு எதிராக அவர் தொடுத்த அறப்போர் காந்திய தேசத்தை தலைகுனிய வைத்தது. தனி மனிதப் பிறவியாக அவர் சாகவில்லை. தமிழீழத்தாய்க் குலத்தின் எழுச்சி வடிவமாக அவரது தியாகம் உன்னத வடிவம் அடைகிறது"** என்றார்.

## மாவீரர் நாள் (நவம்பர் 27)



இந்திய தமிழீழப்போர் உக்கிரம் அடைந்து கொண்டிருந்த காலப் பகுதியில் விடுதலைப்புலிகள் தினமும் தம்முயிரை தமிழீழ விடுதலைக்காக அர்ப்பணித்துக்கொண்டிருந்தனர்.

*1989*, நவம்பர் *27*, அன்று அடர்ந்த

www.tamilarangam.net



தமிழீழக் காடு ஒன்றில் தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரன், முதலாவது விடுதலைப்புலிப் போராளி வீரச்சாவு அடைந்த நாளான "நவம்பர் 27"ஐ "மாவீரர் நாள்" ஆகப் பிரகட னப்படுத்தி உரையாற்றும் போது, "எமது போராட்டத்தில் இன்று ஒரு முக்கியமான நாள். இதுவரை காலமும் எமது புனித இலட் சியமான தமிழீழ இலட்சியத்துக்காக உயிர்த் தியாகம் செய்த 1307 போராளிகளை நினைவு கூரும் முகமாக இந்த மாவீரர் நாளை நாங் கள் ஆரம்பித்துள்ளோம். முதல் முறையாக இன்று இந்த மாவீரர்நாளைக் கொண்டாடுகி றோம். எத்தனையோ உலக நாடுகளில் அந்த நாடுகளின் விடுதலைக்காகப் போரிட்ட போராளிகளின் நினைவாகவும் அந்த நாடுக ளின் பாதுகாப்புக்காகப் போரிட்ட படை வீரர் களின் நினைவாகவும் இப்படிப்பட்ட மாவீரர் நாட்களைக் கொண்டாடுவது வழக்கம்.

உங்களுக்குத் தெரியும், இதுவரை கால மும் எமது இயக்கத்தில் வீரச்சாவு அடைந்த ஒவ்வொரு போராளிக்குமாகத் தனிப்பட நினைவு நாட்களைக் கொண்டாடுவது வழக் கம். ஆனால் இந்த வருடத்தில் இருந்து வீரச்சாவு அடைந்த எல்லோரையும் மொத் தமாக வருடத்தில் ஒருநாள் நினைவு கூர்ந்து அந்த நாளையே "மாவீரர் நாளாக" பிரகடன ப்படுத்தி உள்ளோம். அதற்கு இன்னுமொரு காரணமும் உண்டு. அதாவது எங்களது விடுதலைப்புலிப் போராளிகளில் முதலாவ தாக வீரச்சாவு அடைந்த 'சங்கரின்' நினைவு தினமான இன்று அந்த மாவீரர் நாளை நாங் கள் பிரகடனப்படுத்தி உள்ளோம். அத்தோடு வழமையாக எங்கள் மக்களில் ஒரு பழக்கம் உண்டு. உயர்ந்த பதவிகள், வசதியானவர்கள் இப்படிப்பட்டவர்களைத் தான் பெரிதாகப் பார்க்கும் பழக்கம் உண்டு. அதுபோல் எமது விடுதலைப் போராட்டத்திலும் தலை வர்களை மட்டும் பிரித்து அவர்களது செய் கைகளை மட்டும் பெரிதாகப் பார்க்கக் கூடாது என்பதற்காகவும் எல்லாப் போராளி களும் சமம் என்னும் ஓர் நோக்கத்துடனும் இந்த நாளை நாம் கொண்டாட முடிவு எடுத்துள்ளோம். அதாவது எமது போரா ளிகளை நினைவு கூரும் தினத்தை ஒரு நாளில் வைப்பதால் எல்லோரும் அன்று எமது இயக்கத்தில் இருந்து வீரச்சாவு அடை ந்த தலைவர்களில் இருந்து சாதாரணமாக போராடி வீரச்சாவு அடைந்த உறுப்பினர்வரை எல்லோரையும் சமமாகத்தான் கருதுகிறோம் என்பதுடன், வீரச்சாவு அடைந்த எல்லா போராளிகளின் நினைவு நாட்களையும் ஒன் றிணைத்து மாவீரர் நாளாக இன்று கொண் டாடுகிறோம். இல்லாவிட்டால் காலப்போக் கில் குறிப்பிட்ட சிலசில ஆட்களுக்கே முக் கியத்துவம் கொடுக்கப்பட்டு, அந்த மரியாதை- தகள் குறிப்பிட்ட சில ஆட்களுக்குப் போகா மல் தடுத்து, எல்லோருமே சமமாக ஒரே நாளில் நினைவு கூரப்படவேண்டும் என்பத ற்காகத் தான் இந்த மாவீரர்நாள் கொண்டா டுவதற்கு முடிவு எடுத்தோம். ஓர் இனத்தைப் பொறுத்தவரை வீரர்களையும் அறிவாளிக ளையும் பெண்களையும் மதிக்காத இனம் ஓர் காட்டு மிராண்டி இனமாகத் தான் மாறி அழிந்துவிடும். எங்களுடைய இனத்தில் அறிவாளிகள் இருக்கிறார்கள். மற்ற நாடுகளு டன் ஒப்பிடும்போது எங்கள் இனத்தில் பெண்கள் புனிதமாக மதிக்கப்படுகிறார்கள். அதேவேளை வீரர்களுக்குத் தான் பஞ்சமாக இருந்தது. ஆனால் இன்று இந்த மாவீரர் நாளில், வரலாற்றில் எங்களுடைய இனத் திலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திவிட்டோம். ஆம், எமது வீரர்களைக் கூட நாம் கௌரவிக்க ஆரம்பித்துள்ளோம்.

இதுவரை காலமும் எங்களுடைய இனத்தில் வீரர்கள் என்றால் யார் என்று கேட்கும் நிலை இருந்தது. ஆனால் இன்று நாம் எம் இனத்தின் வீரர்களை நினைவு கூரும் நாள் ஒன்றை உருவாக்கியுள்ளோம். எனவே இனி எமது இனம் நிச்சயமாக அழியாது. இன்று எமது இனம் உலகிலேயே தலைநிமிர்ந்து இருக்கிறது என்றால் அதற் குக் காரணம் எமது 1307 போராளிகளின் உயிர்த்தியாகம் தான். அவர்களுடைய

www.tamilarangam.net



**வீரமான, தமது உயிரையே மதியாது போராடிய உண்மையான தியாகம் தான் எங்களுக்கு இன்று உலக நாடுகளில் ஒரு மரியாதையை ஏற்படுத்தியுள்ளது. எனவே இந்த மாவீரர் நாளை நாங்கள் எங்களுடைய வாழ்நாளில் முக்கியமான விழாவாக இன்றிலிருந்து ஒவ்வொரு வருடமும் கொண்டாட ஆரம்பிக்க வேண்டும்"** என்றார்.


## சிறீலங்கா அரசு விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை

1988இல் புதிய சனாதிபதியாக பதவியேற்ற பிரேமதாசா 1989இல் இருந்தே விடுதலைப்புலிகளைச் சமாதானப் பேச்சுக்கு வருமாறு மாறி மாறி அழைப்புக்களை விடுத்தார். தமிழீழ மண்ணில் இந்திய ஆக்கிரமிப்பிற்கு முற்றுப் புள்ளி வைத்துவிடவேண்டும் என தமிழீழ விடுதலைப்புலிகளும் விரும்பியதால் தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் பிரேமதாசாவின் அழைப்பை ஏற்க முடிவு செய்தார். தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரனின் விவேகமான இராசதந்திர காய்நகர்த்தலால் இந்திய- சிறீலங்கா உறவுகளில் பகைமை மூண்டது. இந்திய இராணுவத்தை வெளியேறுமாறு பிரேமதாசா பகிரங்கமாக அறிவித்தார்.

சிறீலங்காவின் அழைப்பின் பேரில் அமைதிகாக்கப் போரிடுவதாகக் கூறி வந்த இந்திய அரசுக்கு நிலைமை சங்கடமாகியது. அவமானப்பட்டு போரில் தமிழீழவிடுதலைப் புலிகளிடம் படுதோல்வியடைந்து முகத்தில் கரிபூசியபடி இந்திய இராணுவம் மார்ச் 1990இல் தமிழீழத்திலிருந்து வெளியேறிச் சென்றது.

இந்திய பிராந்திய வல்லரசு விடுத்த மிகப் பெரும் இராணுவ சவாலை தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் உறுதியான இராணுவநடவடிக்கைகளாலும் விவேகமான அரசியல் நகர்வுகளினாலும் விடுதலைப் புலிகள் இயக்கம் வெற்றி கொண்டது. இந்திய இராணுவம் வெளியேறிய பிரதேசங்கள் துரித கதியில் விடுதலைப் புலிகள் வசம் வீழ்ந்தன. இலட்சிய உறுதியும் போர் அனுபவமும் வீரமும் மிகுந்த விடுதலைப்புலிப்படை வீரர்களின் மின்னல் வேகத்தாக்குதல்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் இந்திய அரசாலும் அதன் இராணுவத்தாலும் உருவாக்கப்பட்ட **'தமிழ்த் தேசிய இராணுவம்'** என்ற கூலிப் படை சிதறுண்டு ஓடியது. பெரும்பான்மையோர் ஆயுதங்களுடன் சரணடைந்தனர். மாகாணசபை கவிழ்ந்தது. இந்திய அரசின் இறுதித்திட்டமும் தவிடுபொடியாகியது.

தமிழீழத்தேசியத்தலைவர் பிரபாகரன் தனது மறைவிடத்தில் இருந்து வெளியே வந்தார். சீறிலங்கா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தன. இறுதியில் சிங்கள இனவாதத்தின் ஏமாற்றுவேலைகளால், பேச்சுவார்த்தை உருப்படியான தீர்வுகள் பற்றி ஆராயப்படாது முறிந்து போனது.



www.tamilarangam.net



# பகுதி - 5

## தமிழீழப்போர் - II

சிங்களக் காவல்துறையினரின், இராணு வத்தினரின் அத்துமீறல்கள் பற்றிப் பலமுறை சிறீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடு பட்ட விடுதலைப்புலிகளின் பேச்சுவார்த்தைக் குழு அரசுக்கு சுட்டிக்காட்டிவந்தனர். ஆனால் சிறீலங்கா அரசோ அதுபற்றிய அக் கறையின்றி இருந்தது. இதன் காரணமாக பேச்சுவார்த்தைகளில் முறுகல் நிலை ஏற்பட் டுக்கொண்டிருந்த போது யூன் *10, 1990* இல் தென் தமிழீழத்தில் உள்ள கல்முனை என்ற இடத்தில் இஸ்லாமியத் தமிழர் ஒருவருக்கு எதிராக சிங்களக் காவற்துறையினர் மேற் கொண்ட மனித உரிமை மீறல் காரணமாக விடுதலைப்புலிகளுக்கும் சிங்களக் காவற்து றையினருக்கும் இடையில் எழுந்த சச்சரவு இறுதியில் யுத்தமாக மூண்டது.

தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் உடனடியாகவே இவ்யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்குரிய நடவடிக் கைகளை மேற்கொண்ட போதும் சிறீலங்கா வின் சிங்கள இனவாத அரசும் அதன்படை களும் தமிழின அழிப்பும் தமிழ் மண் பறிப் புமே தமது இறுதி முடிவு என்ற ரீதியில் செயற்பட்டபோது தமிழீழ மக்களையும் தமிழீழ மண்ணையும் பாதுகாப்பதற்குச் சிறீலங்கா அரசு ஏவிவிட்ட யுத்தத்தை எதிர் கொள்வதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

*1991* செப்டெம்பர் 1ம் திகதி தமிழீழப் பத்திரிகையாளர்களைச் சந்தித்து அப்போ தைய அரசியல் இராணுவ நிலைமைகள் பற்றி விளக்கும்போது **"தமிழீழப் போர் II தொடங்கும் போது இருந்த பல சிங்கள இரா ணுவ முகாம்கள் தற்போது இல்லை. கொக் காவில் மாங்குளம் போன்ற இடங்களில் இருந்த இராணுவ முகாம்கள் அழிக்கப்பட்ட தால் வன்னிப்பிரதேசத்தின் பெரும் பகுதி எமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட் டது. யாழ்கோட்டை முகாம் அழிக்கப்பட்ட தால் யாழப்பாணத்தின் நகரப்பகுதியும் விடுவிக்கப்பட்டது.**

**ஆனையிறவுப் போரில் மரபு ரீதியான இராணுவ அணியாக எதிரிகளுடன்**

www.tamilarangam.net



நேரடியாக மோதி அழிக்கும் நிலையின் முதற் படியை எடுத்து வைத்தோம். பெரிய எண்ணி க்கையிலான இராணுவத்தை நீண்ட நாட்க ளாக தடுத்து வைத்துப் போரிட்டோம். ஆனையிறவுப் போரில் ஏற்பட்ட இழப்புக்களு க்கு அஞ்சினால் யுத்தம் நடத்த முடியாது. இழப்புக்களை வளர்ச்சியின் ஊன்று கோலா கக் கருதவேண்டும். 10-07-91 இல் ஆனையிற வுப் போர் ஆரம்பித்து 23-08-91 வரையிலான 43 நாள் போரில் 564 போராளிகளை இழந்தி ருக்கிறோம். எதிர்பார்த்ததை விட பெரியள வில் படையினர் இறக்கப்பட்டு நீண்ட நாட் கள் இடம் பெற்ற யுத்தத்தைப் பார்த்தால் எமது தரப்பிலான இழப்பு பெரிதெனச் சொல்ல முடியாது. துன்பங்களை அனுபவிக் கும் மக்களிடம் அடுத்து என்ன என்ற ஏக்கம் இருக்கத்தான் செய்யும். எனினும் பெரிய அளவில் அவர்கள் அணிதிரளவேண்டும். போராட்டத்தில் ஏற்படும் இழப்புக்களை உடனுக்குடன் ஈடுசெய்யவேண்டும். மக்கள் முழுமையாக எம்மோடிணைந்து எமது கஷ்டதுன்பங்களையும் புரிந்து கொள்ளவே ண்டும். நாம் நிபந்தனையற்ற வகையில் சிறீலங்கா அரசுடன் பேசுவதற்கு எப்போதும் தயாராக இருக்கின்றோம். ஆனால் பேச்சுவா ர்த்தைக்குரிய சூழ்நிலையை சிறீலங்கா அரசு தான் உருவாக்க வேண்டும். விடுதலைப்புலி கள் இலங்கைத் தீவில் சிறீலங்கா அரசுக்கு எதிராகத் தான் போராடுகிறார்கள். இந்திய அரசு விடுதலைப் புலிகள் பற்றிக் கவலைப் படத் தேவையில்லை என்றே கருதுகிறேன். மலையகத் தமிழ் மக்களின் தொடரும் துன்பங்களுக்கு மலையகத் தலைமைகளின் தொடர்ந்த துரோகமே காரணம் என்பதை மலையகத் தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். எந்த ஆயுதத்தாலும் எத்தகைய குண்டு வீச்சாலும் தமிழீழ விடுதலைப்போரா ட்டத்தை அழித்து விட முடியாது" என்றார்.

*1991* செப்டெம்பர் 4இல் இலண்டன் பி.பி.சி செய்தி நிருபர் திரு.கிறிஸ்மொறிஸ் சந்தித்துப் பேட்டி கண்டபோது **"தமிழீழ மக்களின் தேசிய பிரச்சினையின் அடிப்படை-களான தமிழர் தாயகம் தமிழர் தேசியம் தமிழர் தன்னாட்சி உரிமை ஆகியவற்றை முதலில் சிங்கள மக்கள் அங்கீகரிக்கவேண் டும். இந்த அங்கீகாரத்தின் அடிப்படையி லேயே இன ஒற்றுமை சாத்தியமாகும். அர சியல் தீர்வுக்கும் வழி பிறக்கும். நாம் பலவந் தமாக எவரையும் இராணுவத்தில் சேர்த்துக் கொள்வதில்லை. அரச பயங்கரவாத ஒடுக்கு முறையினாலும் அதனால் எமது சமுதாயத் தில் ஏற்படும் தாக்கங்களினாலும் சிறுவர்கள் எமது இயக்கத்தில் சேர்ந்து கொள்கிறார்கள் என்பதுதான் உண்மை. அதுமட்டுமல்ல பல பெற்றோர்கள் பகிரங்கமாக எமது கூட்ட மேடைகளிலேயே தமது புதல்வர்களையும் புதல்விகளையும் எம்மிடம் ஒப்படைக்கிறார் கள். அப்படி ஒப்படைக்கப்படும் சிறுவர்களு க்கு நாம் கல்வி வசதி செய்து கொடுக்கி றோம். பல்வேறு துறைகளில் பயிற்றுவிக்கி றோம். தொழிலறிவை வளர்க்கிறோம். சிறுவ யதானவர்களை நாம் போர்க்களத்திற்கு அனுப்புவதில்லை"** என்றார்.

## தமிழீழவிடுதலைப்புலிகள் மகளிர் அமைப்பு

*1984*இன் ஆரம்பப்பகுதியில் முதன் முத லாக பெண்கள் தமிழீழவிடுதலைப்புலிகளால் முன்னெடுக்கப்பட்ட ஆயுதப்போராட்டத்தில் மறைமுகமாக ஆதரவை நல்கத் தொடங்கி யவர்கள் பின்பு தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிராபாகரனின் அனுமதியுடன் ஆயுதப்ப யிற்சி பெற்று இந்திய - தமிழீழப்போர் *1987* ஒக்டோபர் *10* இல் ஆரம்பமாகியபோது நேரடியாக யுத்தமுனைக்குச் சென்று பலவீர சாதனைகளை இன்று வரை படைத்து வருகிறார்கள்.

விடுதலைப்புலிகள் மகளிர் அமைப்புக் குறித்து தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் தெரிவிக்கையில், **"எமது சமூகத்தின் சனத்தொகையில் பெரும் பான்மை இடத்தை வகிக்கும் பெண்கள் தொடர்ந்தும் அடிமைத் தனத்தில் வாழ்ந்து வந்தால் எமது விடுத லைப் போராட்டத்தை ஒரு தேசிய**

www.tamilarangam.net



**போராட்டமாக முன்னெடுப்பது கடினம். இதனை உணர்ந்துதான் எமது இயக்கம் பெண் விடுதலையை முதன்மைப் படுத்தியது. பெண்களை அரசியல் மயப்படுத்தி போராட் டத்திற்கு அவர்களை அணி திரட்டியது. இவ்வகையில் நாம் தமிழீழப் பெண் சமூகம் மத்தியில் ஒரு பெரிய புரட்சியை நிகழ்த்தியி ருக்கின்றோம். தமிழர் வரலாற்றிலேயே நடை பெறாத புரட்சி ஒன்று தமிழீத்தில் நடைபெற் றிருக்கிறது. காலம் காலமாக அடுக்களை யில் அடங்கிப் போயிருந்த தமிழீழப் பெண் ணினம் இன்று ஆயுதம் ஏந்தி நிற்கிறது. சீருடை தரித்து நிற்கிறது. காலம் காலமாக தூங்கிக் கிடந்த பெண்ணினம் இன்று விழிப் படைந்து, எமது போராட்டத்தின் ஒரு புரட்சி கர சக்தியாக எழுச்சி கொண்டு நிற்கிறது. வீரத்திலும் தியாகத்திலும் விடுதலையுணர் விலும் ஆண்களுக்கு எவ்வகையிலும் சளை த்தவர்கள் அல்லர் என்பதை எமது பெண் போராளிகள் தமது வீர சாதனைகள் மூலம் நிரூபித்துக் காட்டி யுள்ளனர்"** என்றார்.

## விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு

ஒரு நாட்டின் எதிர்காலம் அந்நாட்டின் இளைய தலைமுறையினரின் கைகளிலேயே தங்கியுள்ளது. ஆகவே இளைய தலைமுறை யினர் அறிவுள்ளவர்களாக, ஆற்றல் மிகுந்த வர்களாக, பொறுப்புணர்வு கொண்டவர்க ளாக வளர்க்கப்படவேண்டியது ஒரு கட்டாய த் தேவை . எனவே அதற்கேற்ற வகையில் இளஞ்சிறார்களுக்குக் கல்வி ஊட்டப்பட வேண்டியதும் மிக முக்கியமான தொன்றாகி றது. ஆகவேதான் எமது தேச மாணவர்க ளின் நலன் கருதி, தமிழீழத் தேசியத் தலை வரின் ஆணைப்படி உருவாக்கப்பட்ட அமை ப்புத்தான் **"விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு".**

## கடற்புலிகள்

எமது ஆயுதப்போராட்டம் கடந்து வந்த ஒவ்வொரு வளர்ச்சிக் கட்டத்திலும் தமிழீழக் கடல் மிகப்பெரிய பாத்திரத்தை வகித்துள்ளது. 1984ம் ஆண்டு தலைவர் பிரபாகரன் அவர்கள் விடுதலைப்புலிகள் இயக்கத்தின், கடற்புலிகள் படைப்பிரிவிற்கு அதன் வரலாற்று ரீதியான பிறப்பைக் கொடுத்து, ஆரம்பத்தில் அதற்கு 'கடற்புலிகள்' என்று பெயர் சூட்டினார். சிறிலங் காக் கடற்படைக்குச் சவால்விடும் அளவிற்கு, விடுதலைப்புலிகளின் கடற்புலிகள் அணி இன்று வளர்ந்துள்ளது. இவ்வமைப்பில் ஆண் போராளிகளின் அணியுடன், கடற்புலிகள் மகளிர் படை அணி 01-03-1992 அன்று ஆரம் பிக்கப்பட்டு ஆண்களின் பங்களிப்புக்குச் சமமான தமது பங்களிப்பை ஆற்றி சாதனை படைத்து வருகின்றனர்.

## தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

1985 ல் ஆரம்பிக்கப்பட்ட தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் தேவைபற்றி தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் குறிப்பிடும் போது **"தமிழீழ மக்கள் இரு போர் முனைகளைச் சந்தித்துக் கொண்டிருக் கிறார்கள். ஒன்று சிங்கள இராணுவ ஆக்கிர மிப்பை எதிர்த்து மண்மீட்கும் போர் முனை, மற்றையது சிங்களப் பேரினவாத அரசின் பொருளாதர தடைகள் என்னும் அடக்கு முறையை எதிர்த்து உற்பத்திப் போர் முனை. இதயம் எவ்வாறு குருதிச் சுற்றோட்டத்தை ஒழுங்கு படுத்தி நோய்களையும் பாதிப்புக் களையும் வென்றிட உடலுக்குதவுகின்றதோ அவ்வாறே தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் தமிழீழம் எங்கும் உழைப்பைக் குருதியாய் ஓட வைத்து தமிழீழமக்களின் விடுதலைப் போராட்டத்தின் வெற்றியின் அத்திவாரமாக த்திகழவேண்டும்"** என்றார்.

இவ் அமைப்பின் வளர்ச்சியால் இன்று தமிழீழத்தில் பல குடும்பங்கள் நிவாரண த்தை நம்பி வாழாமல் தாமாகச் சுயதொழில் மூலம் வாழும் நிலையைத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஏற்படுத்தி வருவது குறிப்பிடத் தக்கது.

www.tamilarangam.net



## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

மே 6, 1994 வேளான் மன்னர்களுக்கு பரிசு அளித்து கௌரவித்து உரையாற்றிய தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன், **"தமிழீழம் ஒரு செழிப்பான பூமி, வளங்கள் பல நிறைந்த தேசம், தன்னிறைவான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி அதனை அபிவிருந்திப் பாதையில் இட்டுச்செல்லக்கூடிய நீர் வளத்தையும் நிலவளத்தையும் மனித தொழிலாக்க வளத்தையும் கொண்டது. இயற்கையின் கொடையாக எமக்கு வழங்கப்பட்ட இந்த வளங்களை நாம் இனம் கண்டு அவற்றை உச்சப்பயன் பாட்டிற்குக் கொண்டு வரவேண்டும். மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் திறமையான திட்டமிடுதலின் அடிப்படையில் உற்பத்தியைப் பெருக்கவேண்டும். வேளாண்மையும் கைத்தொழிலுமே பொருண்மியக் கட்டுமானத்திற்கு அடித்தளமானது. இந்த இரு துறைகளையும் கட்டி வளர்ப்பதில் நாம் முக்கிய கவனம் செலுத்தல் வேண்டும். இந்த இலக்கில் "தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்" ஆக்கபூர்வமான பல திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது. இந்த முயற்சிகள் மேலும் மேலும் தீவிரம் பெற்று, விடுதலை பெறும் தமிழீழம் தங்கு நிலையற்றதாக தன் காலில் தரித்து நின்று வளர்ச்சி பெறக்கூடியதாக அமையவேண்டும்"** என்றார்.

## கரும்புலிகள்



## இலட்சியத்தில் இரும்பு மனிதர்கள்

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு 1993 யூலை 5இல் தமிழீழத் தேசியத் தலைவர் விடுத்த அறிக்கையில், **"கப்டன் மில்லருடன் கரும்புலிகளின் சகாப்தம் ஆரம்பமாகியது. என்றுமே உலகம் கண்டிராத எண்ணிப்பார்க்கவும் முடியாத தியாகப் படையணி ஒன்று தமிழீழத்தில் உதயமாகியது. கரும்புலிகள் வித்தியாசமானவர்கள், அபூர்வமான பிறவிகள். இரும்பு போன்ற உறுதியும் பஞ்சு போன்ற நெஞ்சமும் கொண்டவர்கள். தங்களது அழிவில் மக்களது ஆக்கத்தைக் காணும் ஆழமான மனித நேயம் படைத்தவர்கள். கரும்புலி என்ற சொற்பதத்தில் கருமையை மனோதிடத்திற்கும், உறுதிப்பாட்டிற்குமே நாம் குறிப்பிடுகிறோம். இன்னொரு அர்த்த பரிமாணத்தில் இருளையும் அது குறியீடு செய்யும் பார்வைக்குப் புலப்படாத பூடகமான இரகசியமான தன்மையையும் செயற்பாட்டையும் அது குறித்து நிற்கும். எனவே கரும்புலி என்ற சொல் பல அர்த்தங்களைக் குறிக்கும், ஆழமான படிவமாக அமையப்பெற்றிருக்கிறது. இந்த இரகசியத் தன்மை கரும்புலிகளின் செயற்பாட்டு வெற்றிக்கு மூலாதாரமானது. இது கரும்புலிகளின் சகாப்தம். இந்தப் புதிய யுகத்தில் எமது போராட்டம் புதிய பரிமாணங்களில் விரியும். சாவுக்கு விலங்கிட்ட மறவர்கள் புதிய சரித்திரம் படைப்பார்கள். எமது சந்ததியின் விடிவுக்கு விளக்கேற்றி வைப்பார்கள்"**, என்று தெரிவித்தார்.

## மார்ச் 8 பெண்கள் தினம்

அனைத்துலக பெண்கள் தினமான மார்ச் 8, 1992இல் தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் விடுத்த அறிக்கையில் **"பெண் விடுதலை எனும்பொழுது அரச ஒடுக்குமுறையிலிருந்தும் பொருளாதார சுரண்டல் முறையிலிருந்தும் பெண்ணினம் விடுதலை பெறுவதையே குறிக்கிறோம். எனவே எமது இயக்கம் வடிவமைத்துள்ள பெண் விடுதலைப் போராட்டமானது தேச விடுதலை, சமூக விடுதலை, பொருளாதார விடுதலை என்ற**

www.tamilarangam.net



**குறிக்கோள்களைக் கொண்ட மும்முனை விடுதலைப் போராட்டமாக முன்னெடுக்கப் படுகிறது. ஆணாதிக்க ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம் அல்ல. இது ஆணாதிக்க அறியாமைக்கு எதிரான கருத்துப் போராட்டமாகும். இந்தச் சிந்தாந்தப் போராட்டம் ஆண்களின் மனவுலக மாற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கவேண்டும்"** என்றார்.

## தமிழீழ படைத்துறைப் பள்ளி

1991 செப்டெம்பர் 19ம் திகதி உருவாக்கப்பட்ட தமிழீழ படைத்துறைப்பள்ளியின் ஓராண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் **" தமிழீழப் படைத்துறைப் பள்ளி எனது முயற்சிகளில் ஒன்று. எனது தேசத்தின் எதிர்காலச் சிற்பிகளாக ஒரு புதிய இளம் பரம்பரை தோற்றம் கொள்ளவேண்டும். ஆற்றல் மிகுந்தவர்களாக, புத்திசாலிகளாக தேசப்பற்று உள்ளவர்களாக போர்க்கலையில் வல்லுனர்களாக நேர்மையும் கண்ணியமும் மிக்கவர்களாக ஒரு புதிய புரட்சிகரமான பரம்பரை தோன்ற வேண்டும். இந்தப் பரம்பரையே எமது தேசத்தின் நிர்மாணிகளாக, நிர்வாகிகளாக, ஆட்சியாளர்களாக உருப்பெறவேண்டும்"** என்று கேட்டிருந்தார்.

## செஞ்சோலை சிறுவர் இல்லம்



யுத்த சூழ்நிலையால் பெற்றோரை, பாதுகாவலரை இழந்த பெண்பிள்ளைகளின் பராமரிப்புக்காக தமிழீழத்தேசியத் தலைவரின் பணிப்புரையின் பேரில் 1991 ஒக்டோபர் 23ம் நாள் செஞ்சோலை சிறுவர் இல்லம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அப்போது தமிழீழத் தேசியத்தலைவர் பிரபாகரனால் அனுப்பப் பட்ட வாழ்த்துச் செய்தியில் **"வரலாற்றுப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்தச் செஞ்சோலை வளாகத்தில் நாம் இன்று இளம் விதைகளைப் பயிரிடுகிறோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாக மாறி ஒரு காலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் செழிப்புற வேண்டும் என்பதே எனது ஆவல். இந்த புரட்சிகரமான பணி வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட எனது நல்லாசிகள்"** என்றார்.

## தமிழீழ காவற்துறை

1991 நவம்பர் 9ஆம் நாள் தமிழீழ மக்களின் நலன்களைப் பேணுவதை மட்டுமே நோக்கமாக வரித்துக்கொண்டு தோற்றுவிக்கப்பட்ட 'தமிழீழ காவற்துறை' யினது செயற்பாடுகள் அதிகாரபூர்வமாக தமிழீழத்தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களினால் தோற்றுவிக்கப்பட்ட இக் காவல்துறை, அவரின் நேரடிப் பொறுப்பின் கீழ் செயல்படுகிறது. இக்காவற்துறையின் செயற்பாடுகள் பற்றி தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கும் போது **"தமிழீழக் காவற்துறையினர் நல்லொழுக்கம், நேர்மை, கண்ணியம் கட்டுப்பாடு போன்ற சீரிய பண்புடையவர்களாக இருப்பார்கள். பொது மக்களுக்குச் சேவை செய்யும் மனப்பாங்குடன் சமூகநீதிக்கும் சமூக மேம்பாட்டுக்கும் உழைக்கும் மக்கள் தொண்டர்களாகவும் கடமையாற்றுவார்கள். எமது பண்பாட்டிற்கு ஏற்றவகையில் மக்களோடு அன்புடனும் பண்புடனும் பழகுவார்கள். சமூக விரோத குற்றச் செயல்கள்**

www.tamilarangam.net



**எவற்றுடனும் சம்பந்தப்படாதவர்களாகவும் தேசப்பற்று மிகுந்தவர்களாகவும் 24 மணி நேரமும் பணியாற்றுவார்கள். தமிழீழ காவற் துறையைப் பொறுத்தவரை குற்றங்கள் நடந் துமுடிந்தபின் குற்றவாளியைத் தேடிப்பிடித்து கூட்டில் நிறுத்துவது அதன் நோக்கமல்ல. குற்றங்கள் நிகழாதவாறு தடுத்துக் குற்றச் செயல்களற்ற ஒரு சமூகத்தைக் கட்டி எழுப்பு வதே அதன் இலட்சியமாகும்"** என்றார்.

**குறிப்பு:-** 'சிங்கள காவற்துறை' யினரால் யாழ்.பொது நூலகம் எரித்துச் சாம்பாராக்கப் பட்ட நினைவுநாளான யூன் 1ம் திகதி தமிழீழ காவற்துறையினர் தமது பயிற்சிகளைத் தொட ங்கினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

## விடுதலைப்புலிகள் கலை,பண்பாட்டுக்கழகம்

எமது மொழியும், கலையும், பண்பாடும் எமது நீண்ட வரலாற்றின் விழுதுகளாக எமது மண்ணில் ஆழமாக வேரூன்றி நிற்பவை: எமது கலையும் பண்பாடும் எமது தேசத்தின் ஆன்மா. இந்தநோக்கத்திற்குச் செயல் வடி வம் கொடுக்கும் விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட முத் தமிழ் விழாவிற்கு 1992 யூலை 15 இல் தமிழீ ழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அனுப் பிய செய்தியில் **" எமது விடுதலைப் போராட் டத்தை மக்கள் மயமாக்கி, மக்கள் போராட் டமாக முழுமைப்படுத்தி மக்கள் அரங்கிலிரு ந்து ஒரு பலமான உறுதிமிக்க தேசிய எதிர்ப் பியக்கத்தைக் கட்டி எழுப்பும் பணி இன்றைய வரலாற்றுத் தேவையாக எழுந்திருக்கிறது. இந்தத் தேவையை பூர்த்தி செய்வதில் எமது, கலை இலக்கியப் படைப்பாளிகளின் பங்கு முக்கியமானது"** என்று குறிப்பிட்டிருந்தார்.

## புலிகளின் குரல் வானொலிச் சேவை

புலிகளின் குரல் வானொலிச் சேவை யின் ஓராண்டு பூர்த்தி தினத்தை முன்னிட்டு தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அனுப் பிய வாழ்த்துச் செய்தியில் **"எமது எதிரியான சிங்கள அரசும் அதன் கைக்கூலிகளான தமிழ்த் துரோகக் குழுக்களும் எமக்கு எதிராக மிகவும் கேவலமான விஷமப்பிரச் சாரங்களை ஆற்றி வருகின்றன. எதிரியின் பொய்ம்மையான கருத்துப்போருக்கு எதிராக உண்மையின் ஆயுதமாக எமது வானொலி யின் குரல் ஒலிக்கவேண்டும். ஒரு சத்திய யுத்தத்தின் போர் முரசாக புலிகளின் குரல் ஒலிக்க வேண்டும்"** என்றார்.

## தமிழீழ சட்டக் கல்லூரி

1993 சனவரி 25ம் நாள் தமிழீழ சட்டக் கல்லூரியில் தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் உரையாற்றும் போது **"தமிழீழத் தனியரசு என்ற இலக்கை நோக்கி நாம் நகர்ந்து கொண்டிருக்கிறோம். அந்தத் தனியரசுக்கான அத்திவாரங்களை நாம் இப்போதிருந்தே கட்டியெழுப்ப வேண்டும். நீதித்துறை அரச நிர்வாக இயந்திரத்தில் முக்கிய பங்கை வகிக்கும் ஒரு நிறுவனம் என்பதால் இப்பொழுதிருந்தே இத்துறை சம்பந்தமாக எமது போராளிகளாகிய உங்க ளுக்குச் சிறந்த பயிற்சி அளிக்கப்படுகிறது. சமூக நிர்வாகத்தில் நீதித்துறை பிரதானமா னது. நேர்மை ஒழுக்கம் கண்ணியம் கட்டுப் பாடு ஆகிய பண்புகளைக் கொண்டவர்களே நீதிபரிபாலனத்தைக் கையாளவேண்டும். முன்பு நீதிபரிபாலனத்திற்கென நாம் உருவா க்கிய இணக்கமன்றுகள் என்ற அமைப்பில் பல தவறுகள் நிகழ்ந்ததை நீங்கள் அறிவீர் கள். இந்த இணக்க மன்றுகளால் வழங்கப் பட்ட தீர்ப்புகளும் மக்களின் விமர்சனத்திற் கும் கண்டனத்திற்கும் இலக்காகின. சுயநல மற்ற முறையில், பாரபட்சமற்ற முறையில் நீதி வழுவாது தீர்ப்புகள் வழங்கப்படவில்லை. எனவேதான் ஒழுங்கும் கட்டுப்பாடுமுடைய எமது இயக்கத்தைச் சேர்ந்த போராளிகளைக் கொண்ட நீதி நிர்வாகமானது ஒரு வலுவான அரசிற்கும் கட்டுப்பாடுடைய சமூக அமைப்பிற்கும் ஆணிவேரானது. சமூக நீதி**

www.tamilarangam.net



சரிவரப்பேணப்பட்டால்தான் சமுதாயம் ஒரு உன்னத நிலைக்கு வளரும்" என்கிறார்.

## தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவை நடத்திய தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டி தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் 1993 பெப்ரவரி 13இல் வெளியிட்ட அறிக்கையில் **"மனித வளர்ச்சிக்கும் சமூக மேம்பாட்டிற்கும் கல்வி ஆதாரமானது. ஆணிவேர் போன்றது. சமுதாய விடுதலைக்குத் தம்மை அர்ப்பணிக்கும் தெரிவுக்கும் கல்வி கற்கும் உரிமைக்கும் இடையில் நாம் என்றுமே முரண்பாட்டைக் கற்பிக்க முயலவில்லை. இரண்டுமே எமது சமூகத்தின் வாழ்வியக்கத்திற்கு இன்றியமையாதவை. போரும் கல்வியும் இணைந்த ஒரு வாழ்வு இன்று எமது வரலாற்றுத் தேவையாக உள்ளது. எமது போராட்டம் கல்விக்கு கவசமாக இருப்பது போல கல்வியும் எமது போராட்டத்திற்கு காப்பரணாக நிற்கவேண்டும். இன்று தமிழீழத்தில் கல்வித்துறை சீரழிந்தநிலையில் உள்ளது. தமிழரின் கல்வியைத் திட்டமிட்டவகையில் சிறீலங்கா அரசு புறக்கணித்து வருகிறது. எத்தனையோ நெருக்கடிகள் இடர்பாடுகளை எதிர்கொண்டு எமது மாணவ சமூகம் கல்வியை கற்கவேண்டியிருக்கிறது. தமது ஆர்வத்தினாலும் திறமையினாலும் கடும் உழைப்பினாலும் கல்வி கற்றுப் பொதுத் தேர்வுக்கு தயாரானாலும் உரிய காலத்தில் அவை நடைபெறுவதில்லை. தேர்வு நடைபெறும் காலங்களிலும் அரச படைகள் அமைதியைக் குலைத்து விடுகின்றன. இத்தனை தடைகளையும் தாண்டித்தான் எமது மாணவர்கள் தேர்வுகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் க.பொ.த சாதாரண தர தேர்வுக்கு ஈடாக முதல் தடவையாக தமிழீழப் பொதுக்கல்வித் தேர்வை தமிழீழக்கல்வி மேம்பாட்டுப் பேரவை சிறப்புற நடாத்தி முடித்திருக்கிறது. இந்த முயற்சியை நான் மனப்பூர்வமாக பாராட்டுவதுடன் இத்தேர்வில் தோற்றிய தேர்ச்சிபெற்ற அனைத்து மாணவர்களுக்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்"** என்று கூறியிருந்தார்.

## தமிழீழ நீதித்துறையின் நீதியாளர், சட்டவாளர்களின் சத்தியப்பிரமாணம்

1993 ஆகஸ்ட் 19 இல் தமிழீழ நீதித்துறையின் நீதியாளர் சட்டவாளர் ஆகியோரின் சத்தியப்பிரமாண வைபவத்தில் ஆற்றிய சொற்பொழிவில் **"போராளிகள் நீதியாளர்களாகவும் சட்டவாளர்களாகவும் பொறுப்பை ஏற்றால் தமது பிரச்சினைகளை நேர்மையாக அணுகி சரியான முறையில் நீதிவழங்குவார்கள் என எமது மக்கள் எதிர்பார்க்கிறார்கள். போராளிகள் ஒரு உன்னத குறிக்கோளுக்காக தமது உயிரையும் துறக்கத்தயாராகவுள்ள இலட்சியவாதிகள் என்பதை பொதுமக்கள் அறிவார்கள். எனவே போராளிகளாகிய நீங்கள் நீதி நிர்வாகத்தை பொறுப்பேற்கும் பொழுது மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள். மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் நீங்கள் நேர்மையுடனும் பொறுப்புணர்வுடனும் செயலாற்றுவீர்கள் என நம்புகிறேன். கற்றது கைமண் அளவு, கல்லாதது உலகளவு என்பார்கள். இந்த உண்மையின் அடிப்படையில் நீங்கள் உலக அனுபவத்திலிருந்து நிறையக் கற்றுக்கொள்ள முயலவேண்டும். அனுபவம் மூலமாகவே நீங்கள் நிறைந்த அறிவைப்பெற்றுக்கொள்ளலாம். மக்களின் உணர்வுகளைப் புரிந்து அவர்களின் முரண்பாடுகளைக் களைந்து அவர்களுக்கு நீதி வழங்குவதை உங்கள் கடமையாகக் கொள்ளவேண்டும் . நேர்மையாகவும் உண்மையாகவும் செயற்படுவதில் பல சிக்கல்கள் இருக்கத்தான் செய்யும். ஆனால் எப்போதும் நேர்மை தவறாது சத்தியத்தின் வழியில் நீங்களும் உங்களது கடமையைச் செய்ய வேண்டும். அதற்கான உறுதியும் துணிவும் உங்களிடம் இருக்கவேண்டும்** என்றார்.

www.tamilarangam.net



## காந்தரூபன் அறிவுச்சோலை



1993 நவம்பர் 13ம் நாள் காந்தரூபன் அறிவுச் சோலை தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட போது அவர் ஆற்றிய உரையில் **" எல்லோருக்கும் பொது அன்னையான தமிழ் அன்னை இந்தச் சிறுவர்களைத் தாயாக அரவணைத்திருக்கிறாள். எமது போராளிகள் அனைவருமே இவர்களின் சகோதரர்கள். எமது இயக்கம் என்னும் மாபெரும் குடும்பத்தில் இவர்கள் இணை பிரியாத அங்கமாக இணைந்துள்ளனர். தனிக்குடும்பம், அந்தக் குடும்பத்தை சுற்றி உறவுகள் என்ற வரையறுக்கப்பட்ட வரம்புகளுக்கு அப்பால் ஒரு பரந்த வாழ்வையும் விரிந்த உறவுகளையும் வைத்துக் கொண்டு வளரப்போகும் இவர்கள், எதிர்காலத்தில் எமது தேசத்தின் சிற்பிகளாகத் திகழ்வார்கள் என்பது திண்ணம். இந்தச் சமூகச் சூழலில் இவர்களிடம் மண்பற்றும் மக்கள் பற்றும் ஆழமாக வேருன்றி வளரும். இத்தகைய நற்பண்புகளுடன் இவர்கள் கல்வியறிவு பெற்று இந்தத் தேசத்தின் நிர்மானிகளாகவும் உருப்பெற்று எமது மக்களுக்குப் பெரும் பணியாற்றுவார்கள். நாங்கள் ஒரு புறம் மண்மீட்புப் போரை நடத்துகின்றோம். மறுபுறம் குழந்தைகளுக்கான வேலைத்திட்டங்கள் போன்ற சமூக சேவைகளிலும் ஈடுபடுகின்றோம். ஆனால் இத்தகைய சமூக சேவைகள் வெற்றி பெற சமுதாயம் தனது ஆக்கபூர்வமான உதவிகளை மனப்பூர்வமாக வழங்கவேண்டும்"** என்று கூறினார்.

**குறிப்பு:-**

பெற்றோரை இழந்து யாரும் அற்ற நிலையில் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர்ந்த கந்தரூபன் என்ற இளைஞன் தானே விரும்பி தலைவரிடம் கேட்டு கரும்புலியாய் சென்று வீரச்சாவைக் தழுவிக்கொண்டார். இம் மாவீரன் தலைவர் பிரபாகரனிடம் **"யாரும் அற்றவனாக வாழ்ந்த என்னை விடுதலைப் புலிகள் என்னும் குடும்பத்தில் இணைத்து ஆளாக்கியதைப்போல, தமிழீழத்தில் அநாதைகளாகாக வாழும் பிள்ளைகளை இணைத்து அவர்களை அநாதைகள் என்ற நிலையில் இருந்து மீட்கவேண்டும்"** என்று கேட்டுக் கொண்டார். அந்த மாவீரனின் ஆசையை நிறைவேற்றும் முகமாக காந்தரூபன் அறிவுச்சோலை எனப்பெயரிடப்பட்டது.

## இலங்கைத் தீவில் நிரந்தரமான சமாதானம்




1994 செப்டெம்பர் 13ம் நாள் இலண்டன் பி.பி.சியின் தமிழ் சேவையின் சார்பில் திருமதி.ஆனந்தி என்ற நிருபர் தமிழீழத் தேசியத்தலைவரைப் பேட்டி கண்டபோது **"பேச்சுவார்த்தைகள் ஒரு சுமூகமான சூழ்நிலையில், ஒரு சமாதானமான சூழ்நிலையில் நடைபெறுவதையே விரும்புகிறோம். ஒரு**

www.tamilarangam.net



சுமூகமான சூழ்நிலையைத் தோற்றுவிப்பதற்கு சிறீலங்கா அரசுதான் உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். சாதாரண சிங்கள மக்கள் போரை விரும்பவில்லை. சமாதானத்தையே விரும்புகிறார்கள் என்பது எமக்கு நன்கு தெரியும். இந்தத் தேர்தல் முடிவுகளும் அதனையே நிரூபித்துக் காட்டுகின்றன. நாமும் சமாதானத்தையே விரும்புகிறோம். ஒரு நிரந்தரமான சமாதானம் ஏற்பட்டு மக்கள் அனைவரும் நிம்மதியாக வாழவேண்டும் என்பதையே விரும்புகிறோம். இன்று சமாதானத்துக்கு முட்டுக் கட்டையாக இருப்பது போர். எனவே போர் ஒரு முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும். யார் இந்தப் போரைத் தமிழ் மக்கள் மீது திணித்தார்களோ அவர்களே இந்தப் போருக்கு முடிவுகட்ட முன்வரவேண்டும். போர் மூலம் இராணுவ அடக்குமுறைமூலம் தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாணமுடியாது என்பதை சிங்கள தேசம் உணர்ந்து கொள்ளவேண்டும். தமிழ் மக்களின் நியாயமான அரசியல் அபிலாசைகளை நிறைவு செய்வதன் மூலமே இன்றைய இனநெருக்கடிக்குத் தீர்வுகாணலாம். சமாதான வழிமூலமே இதனைச் சாதிக்கலாம். இதனை சிங்கள இனவாத அரசியல்வாதிகளுக்கும் இராணுவவாதிகளுக்கும் சிங்கள மக்களே உணர்த்தவேண்டும். நாம் சிங்கள மக்களை நேசிக்கிறோம். நாம் சிங்கள மக்களுக்கு விரோதமானவர்கள் அல்ல. சிங்கள தமிழ் மக்களுக்கு மத்தியில் எழுந்த முரண்பாடுகளுக்கும் பகைமைக்கும் இனவாத சக்திகளே காரணம். இந்த இனவாத சக்திகளைச் சிங்களமக்கள் இனம் கண்டு ஒதுக்கிக் கொள்ள வேண்டும். அப்போதுதான் இலங்கைத் தீவில் நிரந்தரமான சமாதானம் ஏற்படும்" என்று கூறியிருக்கிறார்.




www.tamilarangam.net









தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்